Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-30 12-02-2005 சனிக்கிழமை ஓசை -360

177D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த
சிறி கருமாரி நகையகம்
தற்போது புதியஇடத்தில்...
அசல் 22 கரட் தங்கத்தில்
தங்கநகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்
சிறி கருமாரி நகையகம்
2-05/6, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2225385 (சி-11857)

## யுத்தம் வருமா? வராதா? கூறமுடியாது ஆனால் தயாராக இருக்க வேண்டும்

### சிறில. இராணுவத் தளபதி வவுனியாவில் தெரிவிப்பு

(செட்டிகுளம்)

மீண்டும் ஒரு யுத்தம் வருமா? வராதா? என்று சொல்ல முடியாது. ஆனாலும் இராணுவத்தினர் எப்போதும் பயிற்சியில் ஈடுபட்டுத் தயாராக இருக்க வேண்டும்

இவ்வாறு இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட நேற்று வவுனியாவில் தெரிவித்தார். வன்னி பிராந்தியத்தின் பாதுகாப்பு நிலவரங்களை ஆராய வந்த அவர், வன்னி [illegible]றுவ தலைமையகமான ஜோசப் இராணுவ முகாமில் விஷேட கலந்துரையா[illegible] ஒன்றினை நடத்தினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்குள் அதிகளவு வெளிநாட்டவர் வர தவறான வெளியுறவுக் கொள்கையே காரணம்!

### மாற்றம் வேண்டும் என்கிறார் பிரதி வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை கடைப்பிடிக்கும் தவறான வெளியுறவுக் கொள்கையே சுனாமியை அடுத்து அதிகளவு வெளிநாட்டவர் இலங்கைக்குள் வரக் காரணம் எனப் பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார். மேலும் அவர் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, மாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

### —கௌசல்யன், போராளிகள் கொலைகளைக் கண்டித்து—

# வடக்கில் தொடர்ச்சியான போராட்டங்களுக்கு ஏற்பாடு!

## ஹர்த்தால், பேரணிகள், கூட்டங்கள்

(நமது நிருபர்)

**மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் மற்றும் போராளிகள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து வடக்கில் பல போராட்டங்களை நடத்த ஏற்பாடாகியுள்ளது. இதன் காரணமாக ஹர்த்தால், பேரணிகள், கூட்டங்கள் என்பன நடத்தப்படவுள்ளன.**

இவ் ஏற்பாட்டின் அடிப்படையில் இன்று வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் போராட்டங்கள் நடைபெறவுள்ளன. இதன் பிரகாரம் வவுனியாவில் இன்று எழுச்சி ஊர்வலமும், கண்டனப் பேரணியும், நினைவஞ்சலி நிகழ்வும் நடைபெறவுள்ளது. வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இதற்கான

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் துறைப்பொறுப்பாளரை அகாசி இன்று மட்டக்களப்பில் சந்திப்பார்

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் யப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாசி இன்று அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனை மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் சந்திக்கவிருக்கின்றார். ஏற்கனவே இந்தச் சந்திப்புக் கிளிநொச்சியில் நடைபெறவிருந்த போதிலும், தமிழ்ச்செல்வன் தற்போது மட்டக்களப்பில் தங்கியிருப்பதையடுத்து இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சந்திப்பில் கலந்து கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக இணைப்பாளர் சி.புலித்தேவன் நேற்று மாலை தரை வழியாக மட்டக்களப்புக்குச் சென்றடைந்துள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் இந்தப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் உறுப்பினர் படுகொலைக்கு ச.ம.உ. கண்காணிப்பு அமைப்பு கண்டனம்

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதை சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக் கண்டித்துள்ளது.

நடைமுறை சமாதான முயற்சிகளை இந்தப் படுகொலைச் சம்பவம் பாதிக்கும் என்றும் அந்த அமைப்புக் கவலை வெளியிட்டுள்ளது.

அரசியல் மயப்படுத்தப்பட்ட வன்முறைகள் நாட்டில் நிலவும் அமைதிச் சூழ்நிலையைப் பாதிக்கும் நோக்கம் கொண்டவை என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடமஸ் தெரிவித்துள்ளார்.

## மன்னாரில் இளைஞன் மீது பொலிசார் கொடூரத் தாக்கு

### -எதிராக மக்கள் போராட்டம்

மன்னார் தாழ்வுபாடு கிராமத்தில் இளைஞர் ஒருவர் அப்பகுதி சிறிலங்கா பொலிசாரால் தாக்கப்பட்டதுடன் கொடூரமான முறையில் கத்தியால் வெட்டப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் தாழ்வுபாடு பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஜீவரத்தினம் யூலியஸ் என்ற இளைஞர் தனது வீட்டிலிருந்துதாழ்வுப் பாடு கடற்கரையோரமாகவுள்ள தென்னந் தோப்பினூடாகச் சென்று கொண்டிருந்தவேளை அப்பகுதியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் கௌசல்யன் உட்பட்ட போராளிகளுக்கு கிளி.இல் நினைவு நிகழ்வுகள்

கிளி .மாவட்டத்தில் நேற்று பல்வேறு இடங்களிலும் லெப். கேணல் கௌசல்யன் உட்பட வீரச்சாவடைந்த போராளிகளினதும், நாட்டுப் பற்றாளர் சந்திரநேரு அரியநாயகம் அவர்களினதும் நினைவுக் கூட்டங்கள் நடைபெற்றன.

நேற்றுக் கிளிநொச்சி நகரில் பண்பாட்டு மண்டபத்தில் நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான முன்றலிலிருந்து லெப். கேணல் கௌசல்யன், மேஜர் புகழன், மேஜர் செந்தமிழன், 2ஆம் லெப். விதிமாறன், நாட்டுப் பற்றாளர் சந்திரநேரு ஆகியோரின் திருவுருவப் படம் தாங்கிய வண்ணம் மக்கள் ஏ-9 பிரதான வீதி வழியாக பாண்ட் வாத்திய அணியினர் முன் செல்ல அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்களைத் தாங்கிய வண்ணம் பொது மக்கள் போராளிகள் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பாடசாலை மாணவர்கள் ஊர்வலமாக பகல் 10.30 மணிக்கு பண்பாட்டு மண்டபத்தினை வந்

(12ஆம் பக்கம் பார்க்க)



# லெப்.கேணல் கௌசல்யன் உட்பட அறுவரின் கொலைக்கு கண்டனம்

## — வவு.மாவட்ட தே.எ.பே.கண்டனம்

லெப்.கேணல் கௌசல்யன் உட்பட போராளிகள் நாட்டுபற்றாளர் சந்திரநேரு அரியநாயகம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதற்கு வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப் பட்ட அறிக்கையில், தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் இடம் பெற்ற யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின் தமிழீழ விடுதலைப்புலிகள் நிராயுதபாணிகளாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இக்காலகட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வடக்குக்கிழக்கு மாகாணத்தில் எத்தனையோ புத்திஜீவிகளும், கல்விமான்களும், போராளிகளும் தேச விரோதக் கும்பலால் திட்மிட்டுப்படுகொலை செய்யப் பட்டுள்ளனர். மேற்படி படுகொலைகளில் கொலையாளிகள் என்றும் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்படவில்லை. அரசும் இந்த விடயத்தில் கண்ணை மூடிக்கொண்டு எதுவும் அறியாதது போல் இருப்பது விந்தையிலும் விந்தையே. இதே தொடரில் 07.02.2005 இல் புனானை என்னும் இடத்தில் இரு இராணுவ முகாம்களுக் கிடையில் மட்டக்களப்பை நோக்கிச்சென்று கொண்டிருந்த லெப்.கேணல் கௌசல்யன் அவர்களும் அவருடன் சென்ற போராளிகளும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு அவர்களும், அவரின் சாரதியுமாக ஆறுபேர் படுகொலைசெய்யப்பட்டனர். இப்படுகொலையை இராணுவம் அல்லது அவர்களின் அனுசரணையுடன் தேசவிரோதக் கும்பல்தான் செய்திருப்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். இப்படுகொலைகளை வவுனியா தேசிய எழுச்சிப்பேரவை மிக வன்மையாகக் கண்டிப்பதுடன், இராணுவமும்,அரசும் இதற்குப் பொறுப்பேற்றுப் பக்கச்சார்பற்ற விசாரணை நடாத்திக் குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றது. மக்கள் சமாதானத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இப்படியான இனப்படுகொலைகள் சமாதான முன்னெடுப்புக்களைத் தடுத்து மீண்டும் யுத்தம் ஏற்படுமோ என்று மக்கள் மத்தியில் பீதியை உண்டாக் கியுள்ளது. சமாதானத்திற்காக குரல் கொடுக்கும் தேசிய எழுச்சிப் பேரவை அரசியல் பணியில் ஈடுபடும் தமிழீழ விடுதலைப் புலிகளையும், அரசியல் தலைவர்களையும் படுகொலை செய்யாதீர் என்று அரசுக்கும், ஆயுதப்படையினருக்கும், தேச விரோதக் கும்பல்களுக்கும் எச்சரிக்கை விடுப்பதுடன் சமாதான முன்னெடுப்புக்களை தகர்க்க வேண்டாம் என்றும் அறைகூவல் விடுகின்றது.

# பொன்னம்பலம் மருத்துவமனையில் பொது சத்திர சிகிச்சை

இலண்டனிலிருந்து வருகை தரவிருக்கும் பொது சத்திர சிகிச்சை நிபுணர்களினால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள Dr. பொன்னம்பலம் ஞபாகார்த்த மருத்துவமனையில் இன்று முதல் 12,13 ஆம் திகதிகளில் சத்திர சிகிச்சைகளும் ,மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படவிருக்கின்றது கேணியா, கட்டிகள், காயங்கள், மூல வருத்தம் போன்றவை உட்படப் பல பிரச்சினைகளிற்கு விசேட சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன பயன்பெற விரும்புவோர் மருத்துவமனை வெளி நோயாளர் பகுதியுடன் தொடர்பு கொள்ளவும்.


**5 ஆம் ஆண்டிற்கான விசேட பரீட்சை**

புலமை பரிசில் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் கேம்பிறிச் கல்லூரியில் நடைபெறுகின்றது. சகல மாணவர்களும் கலந்து கொள்ள முடியும். ஒவ்வொரு ஞாயிறும்1-3 மணிவரை 25 பரீட்சைகள் நடைபெறும். வினாத் தொகுப்பு. அம்பிகைபாகன (கொழும்பு). கேம்பிறிச் கல்லூரி, உதய நகர்

(5480)



**தமிழீழ போக்குவரவுக் கழகம்**

**ஊர்தி தூய்மையாக்குநர்**

**பணிக்கான விண்ணப்பம் கோரல்.**

மேற்படி பணியினை ஆற்ற விரும்புபவர்கள் நேரில் விண்ணப்பங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்

**தகைமைகள்:-**

1.கல்வித்தகைமை:- ஆண்டு 08
2. அகவை:- 20 தொடக்கம் 35 வரை

**குறிப்பு:-**

1. 17.02.2005, 18.02.2005 ஆகிய இரு நாட்கள் காலை 09.00 மணி தொடக்கம் பகல் 02.00 மணிவரை கிளிநொச்சி பேருந்து தரிப்பு நிலையத்திற்கு அருகிலுள்ள தூய்மிப்பகத்தில் நடைபெறும்.

2. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
3. உறுதிப்படுத்தும் சான்றுகளுடன் வருகை தரவும்

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழ போக்கு வரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-11329)


## நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு

யாழ்ப்பாண மாநகர பிரதேச நீர் பாதுகாப்பு சூழல் முகாமைத்துவத்திட்டம்

(நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது)

# கேள்வி அறிவித்தல் –இல.02

## சிறுகுளங்களைப் புனரமைத்தல்

01. சிறிலங்கா சனநாயக சோசலிச குடியரசின் பொருளாதார சுற்றுப்புற அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக நோர்வே அரசாங்கத்துடனான ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் மேற்படித்திட்டத்திற்கான நிதி இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சிறு குளங்களைப் புனரமைக்கும் வேலைகளுக் காக பகிரங்கக் கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றது.

02. இதன் பின்னகத்துத் தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சுச் செயலாளருக்காக யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் அவர்களால் மூடி பொறி வைக்கப்பட்ட கேள்விகள் இக்ராட் ஒப்பந்தக்காரரிடமிருந்தும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

03. கேள்விப் பத்திரங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்விக்கும் ரூபா 590/=ப்படி பணமாகச் செலுத்தி 14.02.2005 இல் இருந்து 25.02.2005 பிற்பகல் 15.00 மணி வரை வேலை நேரங்களில் மேற்படி "நோராட்" அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

04. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒரு ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் "நோராட்" வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. ''இக்ராட்'' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும். மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கையினால் அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தினைக் கொண்டிருத்தல் ஆகாது.

06. கடந்த காலங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும். இது தொழில்தருனர்களிடமிருந்து/ அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்றும் தரப்பட வேண்டும்.

07. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் இலவசமாகப் பார்வையிட்டு மேலதிக விபரங்களை "நோராட்" அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல.021-2226752.

08. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் யாவும் அவை திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணைப்பத்திரமும் இணைக்கப்பட்டு "மாவட்ட செயலாளர்/அரசஅதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்குத் தனித்தனி உறைகளில் இடப்பட்டு 28.02.2005 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக இரு பிரதிகளாக அனுப்புதல் வேண்டும். இதற்கென அலுவலகத்தில் புனர்வாழ்வுப்பகுதி கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியிலும் இடப்படலாம். கேள்விப்பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

09. அதே தினம் 15.00 மணிக்கு கேள்விகள் யாவும் அரசாங்க அதிபர் முன்னிலையில் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

10. கேள்வி கோருவோருக்கு இதன் போது ஏற்படும் ஆகு செலவுகளுக்கு தொழில் தருனர் பொறுப்புடையவர் ஆகார்.

### விபர அட்டவணை

| இல. | வேலையின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆககக் குறைந்த தரம் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பத்திரப் பிணை வைப்புப் பணம். (ரூபா) | மீளளிக்கப் படாத பணம் வற்வரி உட்பட (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | பண்டாரக்குளம், நல்லூர் (jpo/wc/po/1/33) | 09 | 17,250.00 | 590.00 |
| 02. | மக்கியா குளம் கொழும்புத்துறைமேற்கு (jpo/wc/po/1/42) | 09 | 16,800.00 | 590.00 |
| 03. | நாயன்மார்கட்டுக்குளம் நல்லூர் (jpo/wc/po/1/34) | 09 | 12,400.00 | 590.00 |
| 04. | இலந்தைக்குளம் கொழும்புத்துறைமேற்கு (jpo/wc/po/1/06) | 09 | 19,100.00 | 590.00 |
| 05. | சின்னக்குளம் கொழும்புத்துறை கிழக்கு (jpo/wc/po/1/02) | 09 | 15,300.00 | 590.00 |
| 06. | வண்ணான்குளம் சுண்டுக்குளி (jpo/wc/po/1/07) | 09 | 12,000.00 | 590.00 |
| 07. | பிள்ளையார் கோயில்குளம்சுண்டுக்குளி (jpo/wc/po/1/32) | 09 | 6,500.00 | 590.00 |
| 08. | வீரமாகாளிஅம்மன்கோவில்குளம் நல்லூர் (jpo/wc/po/1/29) | 09 | 7,700.00 | 590.00 |
| 09. | பிரப்பன்குளம் அரியாலை மேற்கு (jpo/wc/po/1/35) | 09 | 12,300.00 | 590.00 |
| 10. | வண்ணான்குளம், திருநெல்வேலி (jpo/wc/po/1/22) | 09 | 12,800.00 | 590.00 |

12.02.2005
மாவட்டச்செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-11324)

க.கணேஸ்,
தலைவர்,மாவட்டக் கேள்விச்சபை,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.

# ஈராக் தலைநகரில் தொடர் தாக்குதல்கள் பத்திற்கும் அதிக பொலிசாருடன் 38 பேர் பலி!

### – பள்ளிவாசல் மீதும் கார்க் குண்டுத் தாக்குதல்

(பாக்தாத்)

**ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற மூன்று தாக்குதல்களில் ஈராக்கியப் பொலிசார் உட்பட 38 பேர் கொல்லப்பட்டனர். மேலும் நூறிற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.**

பாக்தாத்தில் வடகிழக்கே 45 கிலோமீற்றர் தூரத்திலுள்ள பலாட்ரஷ் பகுதியிலுள்ள ஷியா முஸ்லீம் பள்ளிவாசல்



முன்பாக நேற்று இடம்பெற்ற தீவிரவாதிகளின் கார்க் குண்டுத்தாக்குதலில் 13 பேர் பாலியானதுடன் 40 பேர் காயமடைந்தனர். ஈராக்கியப் படையினரும் கொல் லப்பட்டோரில் அடங்குவர்.

மேலும் வெதுப்பகம் ஒன்றின் மீதும் முகமூடியணிந்த துப்பாக்கிதாரிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 11 பொது மக்கள் பலியாகினர். சிலர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ள னர்.

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினம் பாக்தாத்தில் தென்கிழக்குப் பகுதியில் நடவடிக்கையொன்றில் ஈடுபட்டிருந்த ஈராக்கியப் பொலிசார் மீது தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 14 பொலிசார் கொல்லப்பட்டார் கள். 65 பொலிசார் காயமடைந்துள்ள அதே வேளை 6 பொலிசார் காணாமல் போயுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஈராக்கில் பொதுத் தேர்தல் நடைபெற்று ஒரு வாரம்



கடந்துவிட்ட நிலையிலும் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் தொடர்ந்தும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் 166 கைதிகள் தப்பியோட்டம்

### –நேபாள சிறையில் சம்பவம்

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் திடீர் தாக் குதல் நடத்தி சிறையிலிருந்து தங்கள் சகாக்கள் உட்பட 166 கை திகளை மீட்டுச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் சிறையில் பாதுகாப்பில் இருந்த 5 பொலிசார் கொல்லப்பட்டனர்.

காத்மண்டுவிலிருந்து 600 கி.மீ. மேற்கே கயிலாலி மாவட்டச்சிறையில் புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

சிறைக்கு வந்த தீரவாதிகள் சுமார் 2 மணி நேரம் பொலிசாருடன் சண்டையிட்டனர். இதில் 5 பொலிசார் சம்பவ இடத்திலேயே இறந்தனர். 4 பொலிசார் படுகாயமடைந்தனர். தீவிரவாதிகள் ஒருவர் கொல்லப்பட்டார்.

# ஏழு அரசியல் தலைவர்கள் விடுதலை

(காத்மண்டு)

நேபாளத்தில் வீட்டுக் காவலில் இருந்த மூன்று முன்னாள் பிரதமர்கள் உட்பட 7 அரசியல் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த 7 பேரின் விடுதலைக்குக் காரணம் எதையும் அரசு தெரிவிக்க வில்லை.

நேபாளத்தில் ஜனநாயக அரசைப் பதவிநீக்கம் செய்து 120 தலைவர்களை கைது செய்து மன்னர் ஞானேந்திரா சிறையில் அடைத்தார். நேபாளத்தில் கைது செய்யப்பட்ட தலைவர்களின் எண்ணிக்கை 120 என்று எதிர் கட்சிகள் கூறினாலும், கைதானவர்கள் 25 பேர் தான் என்று மன்னரின் அரசு கூறியது.

வெளிநாடுகளின் கண்டனத்தைத் தொடர்ந்து ஏழு தலை வர்களை மன்னரின் அரசு நேற்று முன்தினம் விடுதலை செய்தது. அவர்களில் நேபாள காங்கிரஸ் நிறுவுனரும், முன்னாள் பிரதமருமான கிருஷ்ணபிரசாத் பட்டாரை முன்னாள் பிரதமர் லோகேந்திரா பகதூர் சந்த் ஆகியோரும் அடங்குவர்.

பதவிநீக்கம் செய்யப்பட்ட பிரதமரும், நேபாள காங்கிரஸ் தலைவருமான ஷேர் பகதூர் உட்பட பல தலைவர்கள் இன்னும் சிறையில் தான் உள்ளனர்.

# இருபது பாரஊர்திகளுட[illegible] ஓட்டுநர்கள் பாக்தாத்தில் தீவிரவாத[illegible]ளால் எரிப்பு

### –நான்கு படையினரும் சம்பவத்தில் பலி

(பாக்[illegible])

ஈராக்கில் 20 [illegible] ஓட்டு நர்களும், நா[illegible] பொலிசாரும் உயிருடன் கொ[illegible]பட்டுள் ளனர். அவர்களின் [illegible]ங்களைப் பொலிசார் வியாழக்கிழமை கைப்பற்றினர்.

பாக்தாத்திற்குத் தெற்கே சுமார் 60 கி.மீ தொலைவிலுள்ள சுவைரா பகுதியில் ரோந்துப் பணியில் இருந்த பொலிசார் பார ஊர்திகளில் அழுகிய நிலையில் சடலங்கள் இருந்ததைக் கண்டனர்.

இந்தச் சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் ஆகியிருக்கலாம் எனச் பொலிசார் தெரிவித்தனர். அரசுக் குச் சொந்தமான 20 பார ஊர்திகளில் பாக்தாத்திற்கு சீனி மூட்டைகள் கொண்டு செல்லப்பட் டன. அவ் அனைத்துப் பார ஊர்திகளும் தீவைக்கப்பட்டுள் ளன. பாரஊர்திகளுக்குப் பாது காப்பாகச் சென்ற இரு பொலி சாரும், இரு இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர்.



இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்று வரும் ஏரோ இந் தியக் கண்காட்சி 2005இல் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பல்வேறு போர் விமானங்களைப் பொதுமக்கள் பார்வையிடுவதையும் இந்திய உலங்கு வானூர்திகளில் பாடிப் பறப்பதையும் படத்தில் காணலாம்.

# பாகிஸ்தானில் கனமழை தொடர்கிறது 46 பேர் பலி; பெருமளவானோர் வீழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கனமழை பெய்து வருகிறது. இதனால் குவாட்டா, பாசினி, பலுசிஸ்தான், ஹமாலயா, காரகோரம், ஆஷாத் காஷ்மீர் ஆகிய பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் பல பாலங்கள் அடித் துச் செல்லப்பட்டன. 2700 குடும்பங் கள் முகாமில் தங்க வைக்கப்பட்டு இருக்கிறார்கள். இதுவரை 46பேர் மழைக்குப் பரியாகிவிட்டனர்.

இமாலயா, காரகோரம், இந்துகுஷ் மலைப் பகுதிகளில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் - சீனாவை இணைக் கும் காரகோரம் நெடுஞ்சாலை காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. ஆஷாத் காஷ்மீர் பகுதியில் உள்ள நீலம் பள்ளத்தாக்குப் பகுதி யில் உள்ள 200 பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் ஒரு வாரம் மூட உத்தர விடப்பட்டு இருக்கிறது. இன்னும் சில தினங்களுக்கு மழை நீடிக்கும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரித்து இருக்கின்றது.

# பாகிஸ்தானில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற பெனாசீர்–நவாப் ஷெரீப் கூட்டாகத் திட்டம்!

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் கள் பெனாசீர் பூட்டோவும் நவாஸ் செரீபும் சவுதி அரேபியாவில் சந்தித்துப் பேசினார்கள். பாகிஸ் தானில் ஆட்சியைப் பிடிப்பது பற்றி அவர்கள் கூட்டாக ஆலோசனை நடத்தினார்கள்.

பாகிஸ்தான் இராணுவத் தளபதியாக இருந்த முஷாரப்பைக் கொல்ல சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு பாகிஸ்தான் பிரதமர் செரீப் பதவி நீக்கம் செய் யப்பட்டார். முஷாரப் சனாதிபதி ஆனார்.

அதோடு நாவாஸ் செரீப்பைக் குடும்பத்துடன் சவுதி அரேபியா வுக்கு முஷாரப் நாடு கடத்தினார். சவுதி அரேபியா செல்ல நவாஸ் செரீப் சம்மதித்ததைத் தொடர்ந்து அவர் தண்டனையில் இருந்து தப்பினார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீரும், கைது நடவடிக் கைக்குப் பயந்து பாகிஸ்தானை விட்டு வெளியேறிக் குழந்தைகளு டன் லண்டனிலும் டுபாயிலும் வசித்து வருகிறார்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த பெனாசீரின் கணவர் அலிசர்தாரி சமீபத்தில் விடுதலையானார். அவர் மனைவி பெனாசீரைப் பார்க்க வெளிநாடு செல்ல சனாதிபதி முஷாரப் அனுமதித்தார். இந்த நிலையில் டுபாயில் இருந்த பெனாசீர் சவுதி அரேபிய தலை நகர் ஜெட்டாவுக்குச் சென்றார். அங்கு நவாஸ் செரீபைச் சந்தித் தார். அப்போது இருவரும் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார்கள்.

இந்தச் சந்திப்பின்போது பெனாசீர் கணவர் அலிசார் தாரியும் உடனிருந்தார். பாகி-ஸ்தானில் தங் கள் அரசியல் இடத்தை மீண்டும் எப்படிப் பிடிப்பது என்பது பற்றி அவர்கள் விவாதித்ததாகத் தெரி கிறது. பாகிஸ்தானில் முஷாரப் ஆட்சிக்கு எதிர்ப்பு அதிகரித்து வரு கிறது. அவரைப் பதவியில் இருந்து அகற்ற எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன. என்பது குறிப்பிடத்தக்கது.

பெனாசீரும், நவாஸ்செரீபும் முஷரப்புக்கு எதிராக அரசியல் நடத்தி வந்தாலும் அவர்கள் சந்தித்து பேசுவது இதுதான் முதல் முயையாகும் முஷாரப் சனாதிபதியாக நீடிக்க பெனாசீர் மற்றும் செரீப் கட்சிகளுடன் சமீபத்தில் பேரத் துக்கு முன்வந்தார். அது பற்றியும் இருவரும் விவாதித்ததாகத் தெரிகிறது. பெனாசீருக்கு நவாஸ் செரீப் மதிய விருந்து கொடுத்தார்.



யொலோ தீவின் பனாமே நகரில் எதிரிகளைத் தாக்கு தலுக்குள்ளான பிலிப்பைன்ஸ் இராணுவ வீரருக்கு சுலுமா காண வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்ப டுகின்றது

# ரஷ்யாவில் சுரங்க விபத்து

(மொஸ்கோ)

ரஷ்யாவில் சைபீரியாப் பகுதியில் உள்ள குஸ்பாஸ் நிலக்கரிச் சுரங்கத்தில் மீத்தேன் வாயு வெடித்ததில் 17 பேர் இறந்தனர். மேலும் 9 பேரின் நிலை தெரியவில்லை

வாயு வெடித்தபோது சுரங்கத்தில் 30இற்கும் அதிகமானோர் பணி புரிந்து கொண்டிருந்தனர்.

ரஷ்ய நிலக்கரிச் சுரங்கங்கள் ஏற்கெனவே இலாபமில்லாமல் செயற்பட்டு வருகின்றன.மேலும் அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு வருகின்றன..

# ரம்ஸ்பீல்ட் ஈராக் பயணம்

அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் நேற்றுக் காலை ஈராக்கிற்கு விஜயம் செய்துள்ளார்.

ஈராக் பாதுகாப்புப் படைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியை நேரில் பார்வையிடவும், அமெரிக்கப் படைகளின் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதுமே அவரது விஜயத்தின் நோக்கமாகும்.

# அரசின் மறைமுகப் போருக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்

**-சர்வதேச சமூகத்திடம் அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு கோரிக்கை**

**விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்,அரசியல்துறைப் போராளிகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேருஉள்ளிட்ட ஆறுபேர் மீதான படுகொலைகள் தமிழ் தேசியத்திற்கும், விடுதலைப்போரிற்கும் எதிரான திட்டமிட்ட நடவடிக்கை. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான இத்தகைய இரகசிய – மறைமுகப் போரினை முன்னெடுக்கும் சிறிலங்கா தரப்புக்கு எதிராக சர்வதேச சமூகம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெனீ வாவைத் தளமாக கொண்டு இயங்கும் அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

அந்த அமைப்பு விடுத்த கண்டன அறிக்கையில் மேலும் தமிழர்தரப்புசமாதானப் பேச்சுக் குழு உறுப்பினரும், ஆழிப் பேரலை களின் தாக்கத்தினால் பாதிக்கப் பட்ட மக்களிற்காக கடுமையாக உழைத்து வந்தவரு மான கௌ சல்யன் தமிழர் ஒற்று மைக்காக மிகமதிப்புள்ள பணி யை ஆற்றியவர்.

கடந்த ஆண்டு ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபை முன் நடை பெற்ற ஐரோப்பிய தமிழ் மக்க ளின் பொங்குதமிழ் நிகழ்வின் முன் ஆற்றிய உரையை அனைத் துலகத் தமிழர்கள் இந்தத் துன்ப மான வேளையில் நினைவு கூரு கின்றனர்.

அவருடன் கொல்லப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப் பினரும்,மனிதஉரிமைகள் செயற் பாட்டாளருமான அரியநாயகம் சந்திரநேரு மனித உரிமைகளுக் கான தமிழர்களின் சர்வதேச செயற்பாட்டிற்கு பெரும் உதவி களை வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெ.படைகள் முற்றாக வெளியேறத் தயாராகின்றன!

சிறிலங்காவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென இலங்கை வந்திருந்த அமெரிக் கப்படையினர் தமது நிவாரணப் பணிகளை நிறைவு செய்து கொண்டு திரும்பத்தயாராகி வரு வதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப்பணிக்கென பாதிக் கப்பட்ட ஏழு நாடுகளுக்கு தனது படைகளை அனுப்பிய அமெ ரிக்கா தற்போது படிப்படியாகப் படைகளைத் திருப்பியழைத்து வருகிறது.

கடந்த இரு வாரங்களாக சுமார் 1600 படையினருக்கு மேல் சிறிலங்காவிலிருந்து வெளியே றிவிட்டனர் என்றும் அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த சொற்ப எண்ணிக்கையானோரே தற்போது சிறிலங்காவில் உள்ளனர். அவர்களும் தற்போது தாயகம் திரும்ப ஆயத்தமாகி வரு கின்றனர் என்றும் அவ்வட்டா ரங்கள் தெரிவித்திருக்கின்றன. ஆழிப்பேரலை அனர்த்தத்தை அடுத்து சுமார் 12இற்கும் மேற் பட்ட நாடுகளின் படைகள் நிவா ரணப் பணிகளுக்காக சிறிலங் காவுக்கு வந்தன. அவற்றில் பல நாட்டுப்படைகள் ஏற்கனவே தாயகம் திரும்பிவிட்டன. ஒஸ்ரியா, கனடா, பெல்ஜியம், கிரிஸ், இத் தாலி, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாட்டுப்படைகள் கடந்த சில நாட்களில் தமது படைகளில் பெரும் பகுதியினரை திரும்பி அழைத்துவிட்டன.

# வவுனியாவில் கறுப்புக் கொடிகளை அறுத்த இராணுவத்தினர்

**–வவு. அரசியல் துறை பொறுப்பாளர் கண். குழு விடம் முறைப்பாடு**

(வவுனியா)

வவுனியாவில் கட்டப்பட்டு இருந்தகறுப்புக்கொடிகள் இராணு வத்தினாலும், அதிரடிப் படை யாலும் இரவோடு இரவாக அகற்றப்பட்டுள்ளமை தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் தி.ஞான வேல் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எழுத்து மூலமான முறைப்பாடு ஒன்றைக் கடந்த புதன் கிழமை செய்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை இரவு மட்டு .அம்பாறை அரசியல் துறை பொறுப்பாளர் கௌசல்யனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகக் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடி களை இராணுவத்தினரும், அதிர டிப் படையினரும் அறுத்துச் சென் றதாகவே அரசியல் துறையினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

# எமது தேசப் பிரதிநிதிகளின் படுகொலை பாரிய போர் நிறுத்த மீறலாகும்

**கிளி.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை**

எமது மக்களின் இயற்கை அழிவு தொடர்பான விடயங் களை தலைமைத்துவத்துடன் பகிர்ந்து கொள்வதற்காக கிளி நொச்சிக்கு வருகைதந்து கலந்து ரையாடிவிட்டு 07.02.2005 அன்று திரும்பிச் [illegible] கொண்டிருந்த வேளை [illegible]த [illegible] பிரிவுக்குட்பட்ட இரா[illegible] கட்டுப்பாட்டுப் பகு[illegible] வைத்து மட்டு-அம்பாறை [illegible] அரசியல்துறைப் பொறு[illegible]ளர் லெப்டினன்ட்கேணல் கௌசல்யன் மற்றும் அவருடன் பயணம் செய்த போராளிகள்,அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திர நேரு ஆகியோர்மிகவும் துரோகத் தனமாகச் சுட்டுக்கொல்லப் பட்டமையை பாரிய போர் நிறுத்த மீறலான அச்செயலை கல்விச் சமூகத்தினராகிய நாம் வன்மை யாகக் கண்டிக்கின்றோம் என கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம் பாட்டுப்பேரவை கண்காணிப்புக் குழுத்தலைவருக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது வாழ்வுரிமைக்காக தம்மையே அர்ப்பணித்து செய லாற்றிய எமது தேசத்தின் பிரதி நிதிகளின் படுகொலைக்கு கண்ட னக்குரலைத் தெரிவிப்பதுடன் இவ்வாறான செயல்கள்தொடர்ந் தும் இடம்பெறாதிருக்கத் தாங்கள் உடனடி நடவடிக்கைக ளை எடுக்கவேண்டுமென வேண்டி நிற்கின்றோம் தொடர்ந்தும் இவ் வாறான செயற்பாடுகள் இடம் பெற தீயசக்திகள் வழி கோலு மாயின் அந்த சக்திகளுக்கெதி ராக கல்விச்சமூகத்தினராகிய நாம் எமக்கு சாதகமான எதிர்ப்பு நட வடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிவரும் என்பதை கிளி நொச்சி மாவட ட கல்வி மேம்பாட்டு பேரவை சார்பாக தெரிவித்துக் கொள்ள விளைகின்றோம் என மேலும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பதுளையில் வைரஸ்தாக்கத்தால் புதுவித இருதய நோய்

**-சிறி.சுகாதார அமைச்சு அறிவிப்பு**

(கொழும்பு)

சிறிலங்கா பதுளை மாவட்ட பகுதிகளில் புதுவித வைரஸ் தாக்கத்தால் ஏற்படும் இருதய நோய் பரவி வருவதாக சிறிலங்கா சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுமார் 74 பேர் இந் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இந் நோயின் அறிகுறிகளாக காய்ச்சல் நெஞ்சுநோ சுவாசக் கோளாறு என்பன காணப்படுவதாகவும் இந் நோயின் தன்மை பற்றி அறிவதற்கு சிறிலங்கா சுகாதார அமைச்சு உடனடி நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிகிறது.

**— புலிகளை உலகவங்கி சந்திக்க முயல்வது —**

# தனிநாட்டுக் கோரிக்கைக்கு உலகவங்கி பின்னால் இருப்பதையே வெளிப்படுத்தும்

**-ஜே.வி.பி. முக்கியஸ்த்தர் விமல் வீரவன்ச தெரிவிப்பு**

(கொழும்பு)

[illegible]லைப்புலிகளுடன் உலக வங்கி சந்திப்பை நடத்தமுயல்வது புலிகளின் தனி நாட்டுக் கோரிக் கைக்[illegible] பின்னால் உலக வங்கி இரு[illegible]தை வெளிப்படுத்துமென ஜே.[illegible]யின் பிரச்சார செயலர் விமல்வீரவன்ச குற்றம் சாட்டி யுள்ளார்.

விடுதலைப்புலிகளை உலக வங்கியின் பிரதிநிதிகள் சந்திப் பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கருத்து வெளியிடும்போதே விமல்வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தற் பொழுது இலங்கை நெருக் கடிமிக்க கால கட்டத்தில் இருக் கையில் பொறுப்பு வாய்ந்த நிறு வனமான உலகவங்கி இவ்வாறு செயற்படுவது சுனாமியினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல் என்ற போர்வையில் உலக வங்கி புலிகளின் பிரிவினைவாதத்திற்கு உ[illegible]வ முயல்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெறவிருந்த இந்தச் சந் திப்பு போராளிகளின் கொலைக ளையடுத்து நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவையை மாற்ற சந்திரிகா திட்டம்!

(கொழும்பு)

சிறிலங்கா அமைச்சரவையில் வரும் ஏப்பிரல் மாதம் புதிய மாற் றங்கள் நடைபெறவுள்ளதாக அர சாங்கத் தரப்பு தகவலொன்று தெரிவிக்கின்றது.

இந்தப் புதிய சீரமைப்பின் அடிப்படையில் நான்கு அமைச் சுப் பொறுப்புக்கள் மாற்றப்பட வுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதன் அடிப்படையில் இலங் கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரானஆறுமுகம் தொண்ட மானுக்கு வீடமைப்பு மற்றும் வேறொரு அமைச்சும் கொடுக்கப் படவுள்ளதாவும், சுசில் பிறேம ஜெயந் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்க உள்ளதாகவும் இவரிடம் தற்போதுள்ள மின்சார எரிபொருள்துறை அமைச்சு தினேஷ் குணவர்த்தனவிடமும் பேரியல் அஷ்ரப்பிற்கு சமுர்த்தித் துறை வழங்கப்படவுள்ளதாகவும், இதன் மூலம் அரசின் நிலையான தன்மையை நிரூபிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் அரச தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த நான்கு அமைச்சுக்களின் மாற்றம் தவிர மேலும் சில மாற்றங்கள் கொண்டு வரப்படலாம் எனவும் அரச தரப்பு தெரிவித்துள்ளது. (32)

# வட்டுவாகல்,செல்வபுரம் இடைத்தங்கல் முகாமில் 87 குடும்பங்கள் நேற்று முன்தினம் குடியிருத்தப்பட்டன

**–தமிழர் புனர்வாழ்வுக் கழகம் துரித நடவடிக்கை**



(படங்கள்:-சசி)

முல்லைத்தீவிலிருந்து இடம் பெயர்ந்து பாடசாலைகள், பொது நோக்கு மண்டபங்கள், நலன்புரி நிலையங்கள் எனப்பலஇடங்களி லும் தங்கியுள்ள மக்கள் தற் காலிகமாகஅமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாம்களில் குடிய மர்த்தப்பட்டு வருகின்றனர். கடந்த சனிக்கிழமை தொடக்கம் இச் செயற்பாடு நடைபெற்று வரு கிறது.

இதேவேளை ஏற்கனவே அமைக்கப்பட்டு குடியமர்த்த சாத் தியமற்ற கொட்டகைகளை அகற்றி மீண்டும் சூழலுக்கேற்ற வகையான முறையில் கொட்ட கைகள் அமைக்கும் செயற்பாடும் துரித கதியில் நடைபெற்று வரு கின்றது. இதனடிப்படையில் நேற்று முன்தினம் வட்டுவாகல் பகுதியில் 30 குடும்பங்களையும், செல்வபுரம் பகுதியில் 57 குடும்பங்களையும் குடியமர்த்திய தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் இவர்களுக்கு தலா ஆயிரம் ரூபாவீதம் உதவிக் கொடுப்பன வாகவும் ஏனைய பாவனைப் பொருட்களான உணவு உணவல் லாத பொருட்களும் வழங்கப் பட்டுள்ளன. இதேவேளை அமைக்கப்பட்டுள்ள இடைத் தங்கள் முகாம்கள் அனைத்தும் கழிப்பறை, குழியல் அறை உட்பட குடிநீர்த்தாங்கிகள் மற்றும் பொழுது போக்கு மையங்கள் எனப் பலவசதிகளையும் கொண்ட தாகவே அமைக்கப்பட்டுள்ள மையும் குறிப்பிடத்தக்கது. (ச)

# மு.திருநாவுக்கரசுவின்

# சமஷ்டியா, தனிநாடா

## நூல் அறிமுகம்

இது வானத்து அரசியலைப் பூமிக்கு இறக்குகின்றது வரலாற்றை இரத்தமும் தசையுமாய் தோலுரித்துக் காட்டுகின்றது.

இது ஆசைகளுக்கும், விருப்பங்களுக்கும், மாயாஜால வித்தைகளுக்கும், போர்த்து மூடிய தர்மபோதனைகளுக்கும் அப்பால் அரசியலை அதன் கூரிய பற்களுக்கிடையே நறுக்குண்ணும் இரையாய், முற்றிலும் அதன் விஞ்ஞான பூர்வ பொறிமுறைக் கூடே காண முனைகின்றது.

திரு. கருணாகரன், திரு. மிகுதன் ஆகியோர் வடிவமைத்த அட்டைப்படம் இந்நூலை அலங்கரிக்கின்றது. ஐ.பி.கே.எவ். ஆல் சுட்டுக் கொல்லப்பட்ட தனது பல்கலைக்கழக மா[illegible]ன் திரு.சி. பிரபாகரனுக்கு இந்நூலை ஆ[illegible]யர் சமர்ப்பணம் செய்துள்ளார்.

ஆசிரியரின் இரண்டு வருட உழைப்பாகிய இந்நூலுக்கு அவருடன் கூடஇருந்து அனைத்தையும் கண்டுணர்ந்த அவரது துணைவி சந்திரா குறிப்புரை எழுதியுள்ளார்.

"வரலாற்றிற்குத் தெரியாத தென்று ஒன்றுமில்லை, மன்னிக்கத் தெரியாததைத் தவிர" என்று வரலாற்றின் நிலைப் பாட்டை எடுத்துக் கூறுவதுடன் ஆரம்பமாகும் இந்நூல் சீனப் பெரும் சுவர் பற்றிய வரலாற் றின் சுமைமிகு யதார்த்தத்தை கூறுவதுடன் முற்றுப் பெறுகின்றது.அதாவது"சந்திரனில் நின்று பார்க்கும் போது பூமியிலுள்ள மனிதனது படைப் பாகக் கண்ணுக்குத் தெரியக் கூடியது. சீனப் பெருஞ்சுவர் ஒன்று தான். அதிசயிக்கத்தக்க இப்பெரும சாதனையை மனிதன் மீதான பகைமையின் நிமிர்த்தமும், தற் பாதுகாப்பின் நிமிர்த்தமே மனிதன் செய்யநேர்ந்தது. மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான வேலிச் சண்டையினதும் பகைமையினதும் சின்னமாய் 2400 கி.மீ நீளமுள்ள சீனப் பெருஞ் சுவரை பூமியும் வரலாறும் சுமந்து நிற்கின்றன"

அறிமுகம் உட்பட மொத்தம் 254 பக்கங்களைக் கொண்ட இந் நூல் ஆறு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளது.

சுமாராக ஈராயிரத்து ஐந்நூறாண்டுகால உலகளாவிய வரலாற்றிலிருந்து சமசூஷ்டி முறையைப் பற்றி வேரிலிருந்து விழுது வரை ஆராய முற்படும் இந்நூல் அத்தகைய சமசூஷ்டிமுறை இலங்கையில் சாத்தியப்பட மாட்டா தெனக் கண்டுகொள்கின்றது.

உலகளாவிய அனுபவத்தின்படி அமெரிக்க, சுவிஸ், பொஸ்னிய-ஹேசகோர்வின் சமசூஷ்டி யாப்பு அனுபவங்களை விளக்கி நிற்கும் இந்நூல் இலங்கைத்தீவில் தோன்றிய முக்கால் நூற்றாண்டிற்கும்




மேற்பட்ட சமசூஷ்டிக்கோரிக்கையின் வரலாற்று ரீதியான தாரதம்மிய ங்களை உருவரை தீட்ட முற்பட்டுள்ளது.

இவ்வரலாற்றுப் போக்கின் நிமிர்த்தம் "சமசூஷ்டி" என்பது சிங்கள மக்களுக்கு கிலி ஊட்டும் பதமாக உள்ளதையும், சிங்கள புத்திஜீவிகளும் தலைவர்களும் சமசூஷ்டித் தீர்விற்கு தயாரில்லையென்றும், அதன் பொருட்டுச் செயற்படவில்லை யென்றும், அத்துடன் சமசூஷ்டி முறைக்கு எதிரான நடைமுறை களையே அவர்கள் கொண்டுள்ளனர். என்றும் இது யதார்த்தத் தைப் படம் பிடிக்க முற்படுகின்றது.

''இலங்கைத் தீவின் அரசியலில் அனைத்துவகை ஒழுங்கு முறைகளும் இனப்பிரச்சினையின் மீதுதான் மையமாகக் கொண்டுள்ளன. தமிழ் மக்களின் முதுகில் ஏறியிருந்து கொண்டுதான் சிங்கள உயர் குழுவும் சிங்கள மக்கள் மீது குதிரையோடுகிறது...... சிங்கள மக்களின் குரல்வளையை நெரிக்க வல்ல பலம்பொருந்திய இராணுவத்தினை தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையின் பேரால் தான் சிங்கள ஆட்சியாளரினால் கட்டிவளர்க்க முடிந்துள்ளது. அப்படித்தமிழின ஒடுக்குமுறையின் பெயரால் கட்டி வளர்க்கப்பட்ட இராணுவத்தின் மூலம் தான் சுமாராக ஒரு இலட்சம் பேர் வரையான சிங்கள இளைஞர்கள் 1988-1989ஆம் ஆண்டு கால கட்டத்தில் கொன்றொழிக்கப்பட்டனர்........." என்று கூறும் இந்நூல் இலங்கையின் உள் நாட்டு, வெளிநாட்டு, சர்வதேச உலக ளாவிய அரசியல் போக்கனைத்துடனும் தமிழீழப் போராட்டம், இலங்கை அரசியல் என்பவற்றைப் பின்னிப்பிணைத்து விளக்க முற்படுகின்றது.

புதிய உலகமயமாக்கலின் கீழ் உலக அரசியலைப் பெரிதும் புதிய கண்கொண்டு பார்க்கு மாறு கூறும் இந்நூல் இந்திய, அமெரிக்க, இலங்கை உறவுக ளையும் அதற்கேற்ப பார்க்க முற்படுகின்றது. இந்நூல் அரசியலைத் தோற்றப்பாடுகளு க்குள்ளாலன்றி அதன் பொறி முறைக்குள்ளால் பார்க்க விரும்புகின்றது.

---

# குடாநாட்டில் 65 கிராம சேவையாளர் பிரிவுகள்

# சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பால் முடக்கம்!

## ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்ந்து அவலவாழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 65 கிராமசேவையாளர் பிரிவுகள் தொடர்ந்தும் இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினரால் இன்னமும் முடக்கிவைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில் 15பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்ட யாழ்.குடாநாட்டில் உள்ள 435 கிராம சேவையாளர் பிரிவுகளில் தற்போது 370 கிராம சேவையாளர் பிரிவுகள் மட்டுமே இயங்கிவருகின்றன.ஏனைய65 கிராம சேவையாளர் பிரிவுகளும் இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினரால் முடக்கிவைக்கப்பட்டுள்ளன.

இதனால் இவ் 65 கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து தம் சொந்தஇடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் அகதி முகாம்களிலும், நண்பர்கள், உறவினர்வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தற்காலிகமா கக்குடியேறியுள்ளனர்.

இவ்வாறு இராணுவ அதிஉயர்பாதுகாப்புவலய நடைமுறைகளால் பாதிக்கப்பட்ட 65 கிராமசேவையாளர்பிரிவுகளைச் சேர்ந்தமக்கள் அவ்வப்போது தமது மீள்குடியமர்வை வலியுறுத்தி அரசபடைகளுக்கு எதிராக வெகுசனப்போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றபோதும் படையினர் மக்களது கோரிக்கைகளை நிராகரித்து ஊதாசீனம் செய்தும் வருகின்றனர்.

இதனால் கிராமசேவையாளர் பிரிவுகளில்இருந்து இடம் பெயர்ந்தோர் தொடர்ந்தும் அடிப் படை வசதிகள் அற்ற அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். (33)

---

# மனநோயாளிகளைப் பராமரிக்க வலியுறுத்து

(தென்மராட்சி)

யாழ்.குடாநாடு முழுவதும் பல்வேறு பிரச்சினைகளின் காரணங்களால் மன நோயால்பாதிக்கப்பட்டு சாலைகளிலும்,தெருக்களிலும் நடமாடித்திரியும்மனநோயாளிகளை உரியகாப்பகங்களில் சேர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள் முன் வரவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அலங்கோலமாகத் திரியும் இந்த நோயாளிகள் மனநிலை பாதிப்பினால் தாங்கள் என்ன செய்கின்றோம் எனத் தெரியாமல் சில செயல்களில் ஈடுபடுவதால் சிலர் இவர்களைத் தாக்கி வருவதுடன் கொட்டன். தடிகளைக் காட்டி துரத்துவதும் அச் சுறுத்துவதும் பல இடங்களில் தொடர்வதாக பொது மக்களால் தெரி விக்கப்படுகிறது. கடந்த மூன்று நாட்களுக்கு முன்னால் யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதிக்கு முன்னால் ஒருவர் மனநோயாளி ஒருவரைத் தாக்கியதில் வீதியில் அந்த மன நோயாளி விழுந்து கிடந்ததை நூற்றுக்கணக்கானமக்களும் வாகனத்தில் சென்றோரும் பார்க்கக்கூடியதாக இருந்தது. (28)

---

# இடைக்கால நிர்வாகம் அமைப்பு

(நல்லூர்)

யாழ்.மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கத்தின் செயற்பாட்டை ஒருங்கிணைப்பதற்கு வசதியாக ஏழுபேர் கொண்ட இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விலைக் கட்டுப் பாட்டு பொறுப்பாளர் செழியன் தலைமையில் நல்லூர் நாவலர் கலாச்சார மண்டபத்தில் இடம் பெற்ற பேக்கறி உரிமையாளர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து இவ் இடைக்காலக்குழு அமைக்கப்பட்டுள்ளது

யாழ்.மாவட்ட பேக்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கும், யாழ்.மாவட்ட பேக்கறி உரிமையாளர். சங்கத்திற்கும் இடையே நீண்ட காலமாக இடம் பெற்று வந்த பிரச்சினைகளைத் தொடர்ந்து பேக்கறி உரிமையாளர்கள் இணைந்து இம் முடிவை மேற்கொண்டுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர், பொது அமைப்புக்கள் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஸ், யாழ். மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர்விஜிதரன், கூட்டுறவுப் பகுதிப்பொறுப்பாளர் புஸ்பன் ஆகியோரும்கலந்துகொண்டனர்.(41)

---

# முகமாலையில் நவீன வசதிகளுடன் கூடிய சோதனை நிலையம் படையினரால் அமைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்கான தரை வழிப்பாதையின் பிரதான நுளை வாயிலாக தற்போது காணப்படும் முகமாலையில் பிரமாண்டமானதொரு சோதனைச் சாவடி யை நிறுவும் முயற்சிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

முகமாலை இராணுவ முன்னணிக் காவலரண் எல்லைகளை மையமாகக் கொண்டு கண்டி வீதியில் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் இராணுவச் சோதனைச் சாவடிப் பகுதியிலேயே இப்புதிய பிரமாண்டமான சோதனைச் சாவடியையும் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டினுள் பிரவேசிக்கும் பயணிகள்மற்றும் எடுத்து வரப்படும் பொருட்கள் என்பவற்றின் மீது மேற்கொள்ளப்படும் சோதனைக் கெடுபிடிகளை அதிகரிப்பதனையும், படையினரது பாதுகாப்பு நடவடிக்கைகளையும் விஸ்தரிக்கும் நோக்குடனேயே இது நிறுவப்படுகிறது.

இதன் மூலம் யாழ்.குடா நாட்டினுள் பிரவேசிப்போர் மீதும் அவர்கள் எடுத்துவரும் பொருட்கள் மீதும் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது. இச்சோதனைச் சாவடியானதுநவீனமயமானதாகவும்நவீனசோதனைவசதிகளுடன் கூடியதாகவும்அமைக்கப் பட்டுள்ளதாகப் படையத் தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(33)

---

# தளபாடங்கள் வழங்கல்

தென்மராட்சி பிரதேச சபையால் இப்பிரதேசத்தில் இருக்கைகள் மற்றும் தளபாடப் பற்றாக் குறையை சந்தித்து வந்த 19 சன சமூகநிலையங்கள் மற்றும் முன் பள்ளிகளுக்கு தளபாட உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச சபையின் செயலாளர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார். இதற்கான கையளிப்பு வைபவக் கூட்டம் கொடிகாமம் பிரதேச சபை புதிய விழா மண்டபத்தில் இடம் பெற்றது. (28)

---

# கொழும்புத்துறை அரியாலைப் பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு!

(தென்மராட்சி)

கொழும்புத்துறை அரியாலைப் பகுதிகளில் தொடர்ந்து இடம் பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களால்பொது மக்கள் திகில் அடைந்துள்ளதாக தெரிய வருகிறது.

வீடுடைப்பு, வழிப்பறியில் இருந்து வீடுகளில் கட்டி வளர்க்கப்படும் ஆடு, மாடு, கோழிகள் என அனைத்தையுமே திருடர்கள் களவாடிச் செல்வதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் யாழ்.மருத்துவமனையில் பணியாற்றும் இப்பகுதியில் உள்ள மருத்துவர் ஒருவருடைய வீட்டுக்குள் ஆட்கள் இருந்த சமயமே இரவு நேரத்தில் உள்ளே புகுந்து கையடக்க தொலைபேசி கடிகாரம் பணம் முதலியவற்றை எடுத்துக் கொண்டு கொள்ளையர்கள் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

மற்றும் கணவனை இழந்த கோழிமுட்டை விற்று குடித்தனம் நடத்தி வந்தபெண் ஒருவர் வளர்த்த கோழிகளை கொள்ளையர்கள் கூட்டோடு தூக்கிசென்றுள்ளதாகவும் மற்றும் இப்பிரதேசத்தில் பல வீடுகளில் இருந்து பசுமாடுகள் பலவும்,நல்ல பால் ஆடுகள்பலவும் களவாடப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். தொடர்ந்து இடம் பெற்று வரும் இச்சம்பவங்களால் இப்பகுதி மக்கள் கதிகலங்கிப் போயுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (28)

# பூமியின் அமைப்பும் இயற்கை அனர்த்தமும்

4,600 கோடி ஆண்டுகளுக்கு முன் இப்பூமி சூரியனிலிருந்து வெடித்துப் பிரிந்து எரிபொருளாக எரிந்து கொண்டிருந்தது. அதன்பின்னர், பலகோடி ஆண்டுகளாக மழை பெய்து பூமியின் நெருப்பு தணிக்கப்பட்டு சமுத்திரங்களும் உண்டாகின. தற்போது பூமியின் 71 வீதம் நீர்ப்பரப்பாகவும் 29 வீதம் நிலப்பரப்பாகவு முள்ளது.




1. TECTONIC PLATES எனப்படும் கற்பாறைகள் அடிச்சமுத்திரங்களுக்குக் கீழ் 6 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட மொத்தமாகும். நிலப்பரப்புகளின் கீழ் இக்கற்பாறைகள் 60 கி.மீ. மொத்தமாகவும் இருக்கலாம். சமுத்திரங்களின் கீழ் மொத்தம் குறைவானாலும் நீரின் குளிரால் பலம் கூடிய கடினமான கற்பாறைகள் ஆகவுள்ளது. நிலப்பகுதிகளிலிருக்கும் கற்பாறைகள் கூடிய மொத்தமாயினும் நிலச்சூட்டினால் கடினம் குறைவாகவுள்ளது.

2.MANTLE 2,900 கி.மீ. தாழ்ப்பமான கற்பொருள், சூட்டின் காரணத்தால் இக்கல் தன்கடினத்தை இழந்து களிமண் போலிருக்கும், இதை SEMI MOLTEN ROCK என வர்ணிக்கலாம். இது Tectonic Platesஎன்ற கற்களால் மூடப்பட்டிருக்கிறது. ஆனால் Tectonic Plates இல் வெடிப்புகள் ஏற்பட்டு Volcano எனப்படும் பூகம்பத்திற்கு இந்த Mantle காரணமாகிறது. பூகம்பங்கள் வந்துதான் மலைகள் உண்டாகின.

3.OUTER CORE 2,240 கி.மீ. மொத்தமுள்ள இருப்புத் தன்மையான கல். ஆனால் இது சூட்டின் ஆதிக்கத்தால் கரைந்து நீர் போலிருக்கும். இதன் வெப்பம் 3,000° C என மதிப்பிடலாம்.

4. பூமியின் நடுவல் 2,400 கி.மீ. விட்டமுள்ள diameter வட்டக்கல் தான் இங்கு தான் ஆகக் கூடிய வெப்பமுள்ளது. 3,700°C வெப்பநிலை யுள்ள இந்த இரும்பு சுமார் 5 ஆயிரம் கி.மீ.உயரமுள்ள கற்பொருட் களைத் தாங்கி மிகுந்த அமுக்கத்தில் இருப்பதால் இது கரையாமல் கற்பொருளாகவே இருக்கிறது.

1.Tectnic Plates கற்பாறைகள் ஒரே இடத்திலிருப்பதில்லை. ஒவ்வொரு நாளும் ஒன்றோடொன்று உரைபட்டு மிகச் சிறிதளவு அகல்வதுண்டு சிறிய அகல்வுகள் எங்களுக்குத் தென்படாது. ஆனால் கற்பாறைகள் வெடித்து அகல்வுகள் கூடினால் நாம் அதைப் பூமி அதிர்வு அல்லது பூமி நடுக்கம் எனக் கூறுவோம்.

பூமி அதிர்வு நிலப்பகுதியிலும் வரலாம் சமுத்திரங்களுக்கு அடியிலும் வரலாம். சமீபத்தில் இருந்து சமுத்திரத்தின் அடியில் ஏற்பட்ட அதிர்வு ஆழ்ந்த சமுத்திர நீரை தளர வைத்து. அப்படி தழும்பிய நீர் பல நாடுகளின் கடலோரங்களை சுனாமி அலையாகத் தாக்கியது.

சுனாமி அலைகள் உலகின் பல பாகங்களில் இடைக்கிடையே வந்து பல ஆயிரக் கணக்கான மக்களை கொன்று விடுகின்றது ஆனால் சமீபத்தில் நடந்த சுனாமி பூமியின் சரித்திரத்திலேயே பெரிய சுனாமி யெனக் கருதப்படுகிறது. இதைவிடப் பெரிய சுனாமிகள் பல்லாயிரக் கணக் கான ஆண்டுகளுக்கு முன் வந்து கண்டங் கள் கூட நகர்ந்தன வென்ற சான்றுகளு முள்ளன.

எதிர்காலங்களில் சுனாமியைவிட பூமி அதிர்வுகளே உலகத்திற்கு கூடிய பாதிப்புக்களை விளைவிக்குமென விஞ் ஞானிகள் நம்புகின்றனர். 1976 ஆம் ஆண்டில் சீனாவில் பூமி அதிர்வு ஏற்பட்டு மூன்று லட்சம் மக்கள் இறந்தனர். ஜப்பான், இந்தோனேசியா, அமெரிக்கா, இந்தியா, துருக்கி, ஈரான் போன்ற பல நாடுகள் ஆயிரக்கணக் கான மக்களை இழந் துள்ளன. மொத்தமாக சுனாமியினால் இறந்தோர் தொகையிலும் பார்க்க பூமி அதிர்விலிறந்தோர் தொகையே மிக அதிகம்.

விஞ்ஞானிகளின் நோக்கின்படி வட அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்திலும் பசுபிக் சமுத்திரத்திற் கருகில்நிலப்பகுதிக்குக் கீழ் கற்பாறை களில் வெடிக்கும் தன்மையுண்டு. ஏற் கனவே இப்பகுதிகளில் பூமி அதிர்வு களேற்பட்டு மக்கள் இறந்தார்கள் எனினும் இப்பகுதிகள் பொருளாதார அபிவிருத்தியடைந்தபடியால் பல கோடி மக்கள் இங்கே சுகவாழ்வு வாழ்கின்றனர். மிகப் பெரிய ஆபத்து நிலையில் இருந்தும் பொது மக்களுக்கு இப்பகுதி களை விட்டு வெளியேற விருப்ப மில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் மனம் தளர்ந்து வருந்துவது இயற்கை தான். தமிழ்த் தாய் நாட்டி லும் ஈழத்திலும் உயிர்களையும் பொருள்களையும் இழந்த தமிழர்களாகிய நாம் மன உறுதியுடனும் விஞ்ஞான அறிவு டனும் எமது நாடுகளைக் கட்டி எழுப்ப ஒன்றுபடுவதே புத்தி.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடல் நோயும் மனநோயும் உண்டு. பொருட்களை இழந்த இவர்களின் வாழ்வு நிலை திடீரென குறைக்கப்பட்டிருக்கிறது. வீடுகளும் பொதுக் கட்டடங்களும் இழந்த இடங்களில் உடனே கட்டட வேலைகளை ஆரம்பித்தால் பொது மக்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

சிறுவர்களுக்கும் மாணவர்களுக்கும் கல்வி மிகப்பிர தானமாகும் அத்துடன் அவர்களின் மனநிலையும் உற்சாகமும் வளர விளையாட்டுப் போட்டிகள் (sports), சங்கீதக் கல்வி (Music) கடவுள் வழி பாடு, படம் வரை தல்(Art) போன்றவை எதிர்காலத் தமிழ்ச் சமுதா யத்தை முன்னேற்ற மடையச் செய்யும்.

இச்சுனாமியின் அழிவுகளை விஞ்ஞானிகள் ஏன் முன் கூட்டியே அரசாங்கங்களுக்கு அறி விக்கவில்லை என்று சிலர் கேட்பார்கள். இதற்காகத்தான் ஔவையார் சொன்னார் 'நாம் கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு' என்று விஞ்ஞான அறிவு குறைந்த சிங்கள அரசு பொது மக்களை கடற்கரையோரங்களில் வீடுகள் கட்டாமல் உட்பகுதிகளிலுள்ள மேட்டு நிலங்களுக்குச்செல்லுமாறு கேட்டுள்ளது. ஆனால மேட்டு நிலங்களிலுள்ள மரங்களை வெட்டி வீடுகள் கட்டினால் நிலப்பகுதிகளின் மென்மண் (Top Soil) மழையால் கரைந்து கடலுக்குப் போய்ச் சேரும் மேல் மண் இல்லாத நிலப்பகுதிகள் பசளை யற்ற வனாந்தரமாக மாறிச் சுற்றாடலைத் தாக்கும்.

பாதிக்கப்பட்ட இடங்களை விஞ்ஞானக் கட்டுப்பாட்டுடன் அபிவிருத்தி செய்தல் வேண்டும். கடற்கரையோரங்களை நாம் விஞ்ஞான அறிவுடன் கடலரிப்புகளேற்படாமல் பாதுகாப்பாகக் கட்டடங்கள் கட்ட வேண்டும். கடலரிப்புக்களைத் தடுக்கும் வேலைகளை (Protect ion works என்று கூறுவார்கள்.) பொறியியலாளர்களால் செய்யப்படும் இத்திட்டங்கள் இலங்கைத் தீவுக்குப் பிரதானமாகும்.

பொறியியலாளர்கள் சுனாமியின் தாக்கத்தைத் தாங்கக் கூடிய கட்டடங்கள் கட்ட முடியும். இதை அரசியல்வாதிகளும்பொது மக்களும் உணர வேண்டும். பூமி அதிர்வு சுனாமி Cyclone எனப்படும சுழற் காற்று, கடும் மழை வெள்ளம் போன்ற அனர்த்தங்களை மனிதர் ஆதிகாலத்திலிருந்தே தவிர்க்க முடியாமலிருக் கின்றனர். இவற்றால் ஏற்பட்ட தாக்கங்களைக் குறைப்ப தற்காக நாம் தமிழ்ச் சிறுவர் களுக்கு ஆங்கிலக்கல்வி, விஞ்ஞானம், சுற்றாடல் கல்வி போன்றவற்றைக் கற்க ஊக்க மளிக்க வேண்டும்.

ந.தேவராசன்,
பொறியியலாளர்,
30 Malta Ave.Apt. 1805
Brampton , Ont.L6Y455
Canada

## கிறீப்ஸ் பறவை



''கிறீப்ஸ்'' எனப்படும் இவ்வகைப் பறவை உலகில் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. இவை அநேகமாக ஆறுகள் குளங்கள் போன்ற நன்னீர்ப்பரப்புகளிலேயே வாழ்கின்றன.

இதன் விசேட அம்சமானது முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் காலங்களில் தலைப்பகுதி இறகுகளால் குஞ்சம் போன்ற அலங்கரிப்பாகவும் காணப்படும் அத்துடன் அடைகாக்கும் காலங்களில் னது சிறகுகளையே அவை உண்பதோடு குஞ்சுகள் பொரித்தவுடன் அவற்றுக்கும் )குகளை உணவாக அளிப்பதோடு குஞ்சுகளையும் அவ்வாறு சிறகுகளை உண்ணப்பழக்குகின்றன.

இவற்றுக்கு 20 ஆயிரம் சிறகுகள் காணப்படுகின்றன, இவற்றில் பெரும் பகுதியை அவை உணவாக உட் கொண்டாலும் அவற்றின் உடல் தட்ப வெப்ப நிலையால் பாதிக்கப்படுவதில்லை. இவை ஏன் சிறகுகளை உண்கின்றன என்பது புரியாத விடயமாகும்.

கிறீப்ஸ் நீரில் கூடு கட்டி (மிதவைகள் போன்று) முட்டையிடுகின்றன சுமார் 6முட்டைகளையிட்டு 3முதல் 4வாரங்களில் குஞ்சுகளைப் பொரிக்கும்.

ஜப்பானிய கையடக்கத் தொலைபேசிக்கருவியைத் தயாரிக்கும் நிறுவனமான "சொனி எறிக்சன்" அண்மையில் தயாரித்து வெளியிட்டுள்ள ''பீரிமானி - II'' என்ற கையடக்கத் தொலைபேசியே இதுவாகும். 97 கிராம் நிறையுடைய இது தான் உலகிலேயே இணையத்தளத் தொடர்பைக் கொண்டுள்ள மிகவும் சிறிய கையடக்கத்தொலை பேசியாகும். இதில் 1.3 மெகா பிக்சல் அளவுடைய புகைப் படக்கருவியும் பொருத் தப்பட்டுள்ளது. இதில் இசையைக் கேட்கலாம் இதனூடாகவரும்இசையை மெமறி ஸ்ரிக் மற்றும் IC



காட் மூலம் பதிவு செய்தும் வைக்கமுடியும் இதை விரைவில் சந்தைக்குவிட அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது. இதன் பெறுமதி 20 ஆயிரம் ஜென்களாகும்.



இங்கு அறிமுகப்படுத்தப் படுவது ஜப்பானின் சொனி இலத்திரனியல் நிறுவனம் புதிதாக தயாரித்துள்ள ஒலி,ஒளிப் பதிவு சாதனமாகும் "Handy cam DCR DVD 403" எனப்படும் இச்சாதனம் 3.3 MM விட்டமுடைய ஒலி, ஒளிப் பதிவுத் தட்டைக் கொண்டதும் 5.1X 51M.M திரையையும் கொண்டுள்ளது இது அடுத்த மாதமளவில் சந்தைக்கு விடப்படும் இதன் பெறுமதி 135 ஆயிரம் ஜப்பானிய ஜென்களாகும்.

# அழிஞ்சுபோன ஊர் ஒண்டில போய் கரை ஏறி இருக்கிறம் எண்டு நினைச்சம்

**சுனாமி அலைகள் முல்லைக்கரையோரத்தை மூர்க்கமாகத் தாக்கிய சமயம் கடலில்தொழில் செய்து விட்டு கரை திரும்பிக் கொண்டிருந்த வண்ணாங்குளத்தை சேர்ந்த சூசைநாதர் குலேந்திரன்என்வர் தனது அனுபவத்தை பகிர்ந்துகொள்கிறார்.**

அ.லோகீசன்

பகுதி -2

**முல்லைத்தீவில்** வண்ணாங்குளத்தில் உள்ள எனது வீட்டிலிருந்து அன்று அதி காலை 4.00 மணியளவில் தொழிலுக்காக கடலுக்குப் போனோம்.

அன்றையபொழுது வழமைமாதிரியே தான் இருந்தது. கடலில் எந்த மாற்ற மும் இருந்ததாகத் தெரியவில்லை. நானும் இன்னொருவருமாக ஒரு படகில் வலைகளை



ஏற்றிக் கொண்டு கடலில் இறங்கி தொழிலுக்காகப் புற டோம்.

வழமையாக நாங்கள் தொழிலுக்குப் போற நேரம் கரையிலிருந்து ஏராளம் பேர் வருவார்கள். ஆனால் அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் பெரிதாக எவரும் வரவில்லை. மூன்று நான்கு போட் மட்டும் தான் போனது. இப்படி நாங்கள் மேல ஏறி வலை படுத்திட்டுப் பாதை காட்டிப் போட்டு ஆறு மணியளவில் போட்டில் படுத்துவிட்டோம். படுத்த நாங்கள் ஒரு ஏழு மணியிருக்கும் எழும்பி வலை இழுப்ப தற்குத் தயாரானோம்.

நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து வலை இழுத்தம் பறவாயில்லாமல் மீனுகளும் பட்டிருந்தது வழமையாய்ப் படுறதவிட அண்டைக்கு எங்களுக்கு கனக்க மீன் பட்டிருந்தது.

200 கிலோவுக்குக் கூட மீன்பட்டதால்



நல்ல சந்தோசமாய் இருந்தது. அதோட நாங்கள் வெளிக்கிடுவம் எண்டு நினைக்க வானம் சாடையாக இருண்டு மழை தூமிக்க வெளிக்கிட்டுட்டுது.

மழையைக் கண்ட உடன் வலையையும் போட்டில தூக்கிப் போட்டுக் கொண்டு கரையை நோக்கி வெளிக்கிட்டு விட்டோம். எப்படியும் கரையில் இருந்து எட்டு கடல் மையில் தூரத்துக்கு அங் கால

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

போய்த்தான் தொழில் செய்திருப்பம். மழை மெது மெதுவாகக் கூடிக்கொண்டிருந்தது.

இப்படியிருக்க நாங்கள் வழமையாக வாற குறிப்புக்கு கரைக்கு வந்திட்டம் எண்டு தெரிந்தது. ஆனால் கரை தெரியவே இல்லை. மனதில் ஒரு விதமான பயமாக இருந்தது. என்னுடன் தொழிலுக்கு வந்த மற்றப் பெடியன் அணியத்தில் ஏறிநின்று கரை தெரிகிறதா? என்பதைப் பார்த்தான் பார்த்த அவன் பயம் கலந்த முகத்துடன் "கரையே தெரியேல்ல என் னண்ண வேற இடத் துக்கு போட்டம் போல இருக்குது" எண்டு என்னைப் பாத்து கூறினான்.

எனக்கும் அப்படித் தான் தெரிந்தது ஆனாலும் உள்மனம் நம்ப மறுத்தது. திரும்பவும் வடிவாகப் பார்த்தேன் கரை தெரியவே இல்லை. கடல் பெரிதாக எழும்பி அடிப்பது தெரிந்தது. கரையில் கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. இதைப் பார்த்த உடனே சூறாவளி வரப்போகுது எண்டு நினைத்தேன். கப்பல் நிக்கிற இடத்தில் உள்ள சுளிக்கு வந்து நிக்கிறம் போல இருக்கு. திரும்பி மேல ஏறி எங்கட இடத்துக்குப் போவம் எண்டு கிழக்கு நோக்கி போட்டை ஓடிக்கொண்டு போனேன். எங்க பார்த்தாலும் கடல் ஒரே இருட்டாகத்தான் இருந்தது. கடல் மோசமாகக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. அதைப் பார்க்க எனக்குப் பயமாய் இருந்தது. இண்டைக்குஎண்டு கடலுக்கு வந்தம் இப்ப எப்படிக் கரைக்குப் போறது எண்டே தெரியல்ல. இப்ப முக்கால் மைலுக்குள் தான் நிக்கிறம் இப்படியே நாங்கள் கடலுக்கதான் சாகப் போறம் போல கிடக்குது. என்ர வீட்டுக் காரர் என்ன செய்யப் போகுதுகளோ தெரியல்ல எண்டெல்லாம் மனதுக்குள் பயந்தம். எப்படியும் கரைக்குப் போக வேண்டும் எண்டு ரண்டு பேரும் முடிவெ டுத்து திடலான இடத்தைத் தாண்டி ஒரு சின்னக் கடல் பிடிச்சு ஓடிக் கொண்டு வந்து கரைக் குக்கிட்ட வந்திட்டம். வந்த பிறகுபாத்தால் கரையில் கடல் பிரண்டு பிரண்டு அடிச்சுக் கொண்டு கிடந்தது.

கடற்கரை தெரியவே இல்லை மரங்களின் மேல் வட்டுகள் மட்டும் தான் தெரிந்தது. கட்டிடங்கள் ஒன்றும் தெரியல்ல அதைப் பாக்க பயங்கரமாக இருந்திச்சு நாங்கள் வேற இடத்துக்கு இடம் மாறி வந்திட்டம் போல கிடக்குது எண்டெல் லாம் நினைச்சு நான் போட்டை கடலுக்குள் திருப்பினன் திருப்பின உடன பாத்தால் ஒரு பெரிய அலை எங்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தது.

அதைப்பார்த்த உடன் என்னோட தொழிலுக்கு வந்த மற்றப் பெடியன் "அண்ணை கடல் வருகுது இதில நிண்டால் நாங்கள் கவுண்டு செத்துப் போவம் அது என்ன இடம் எண்டாலும் பறவாயில்லை நீ கரைக்கு விடு " என்று ஆவேசமாக சொன்னான்.

நானும் பயத்தில கரைக்கு ஏத்திப் போட்டன் கரைக்கு வந்த பிறகு எங்களுக்கு பின்னால வந்த அலை அடிச்சது ஒரு மாதிரி அதில இருந்து தப்பிட்டம்., அந்த அலை அடிச்சுக் கொண்டு போன பிறகு தான் வடிவாய் இடத்தப் பாத்தம் வேற ஏதோ இடம் மாதிரி இருந்திச்சு. என்னண்டு அப்பிடி இடம் மாறிப் போனம் எத்தின நாள் கடலில போய் வந்த எங்களுக்கு இடம் தெரியாமல் அப்படி மாறி வந்திட்டமோ. என்னால் நம்ப முடியாமல் இருந்திச்சு ஆனால் இடத்தின்ர தோற்றத்தைப் பாக்க பயங்கரமாய் இருந்தது.

கட்டிடங்கள் எல்லாம் இடிஞ்சு போயும் மரங்கள் முறிந்தும் பிரண்டும் போய் கடற்கரை எல்லாம் மணல் இல்லாமல் பெரிய பெரிய வாய்க்கால்களாக் இருந்தது.இந்த இடம் எங்கையாக இருக்கும் மரணபயமாக இருந்தது.ஆக்களையும் காணேல்ல இப்ப என்னும் பயம் கூடிக் கொண்டு போனது.

இப்பிடியே பாத்துக் கொண்டு இருக்கையில் கடல் கரையில் இருந்த எங்கட போட்டை கடல் மெதுவாக அடிச்சுக் கொண்டு போச்சுது நான் உடன் அந்த தண்ணிக்குள்ளால ஓடிப்போய் அதைப் பிடிச்சு இழுத்து பக்கத்தில இருந்த மரத்தில நங்கூரக் கயித்தால கட்டினன் நாங்கள் எங்க நிக்கிறம் எண்டு தெரியாமல் பயந்து கொண்டிருக்கேக்க வந்த படகும் இல்லாமல் போனால் பிறகு என்ன செய்யிறது எனக்கு தலை வெடிக்கும் மாதிரி இருந்தது.

நான் என்பாட்டில் ஏதோ யோசிச்சுக் கொண்டிருக்க என்னோட வந்த மற்றப் பெடியன் "ஆமின்ர இடம் போல தான் கிடக்குது அது தான் சனத்தைக் காணேல்ல எதுக்கும் வடிவாய் பாத்துப்பாத்துப் போவம் அவங்கள் ஆரும் வந்தால் உடன கையைத் தூக்குவம் எண்டு சொன்னான்'' எனக்கு அவன் சொல்லு றது சரிமாதிரித் தான் தெரிஞ்சுது. அதால அப்பிடியே செய்வம் எண்டு சொல்லிப்போட்டு கரை யால கொஞ்சத்தூரம் போக ஒரு மலசல கூடத்துக்கு மேல கிடந்து ஒரு ஐயா கத்திக்கொண்டிருந்தார்.



அதைப்பாத்ததும் எங்கண்ட தமிழர் இருக்கிற இடத்திலதான் கரையேறி இருக்கிறம் அப்ப பின்ன பறவாய் இல்லை. எண்டு நினைச்சு சந்தோசப்பட்டுக் கொண்டு அந்த ஐயா இருந்த இடத்துக்குப்போனம் கிட்டப் போனபிறகு பார்த்தால் என்ர சினேகிதப் பெடியன்ர அப்பா முத்துராசா கால்முறிஞ்சு போய்க்கிடந்தார்.

என்ன நடந்திருக்கும் அவர் எப்படி இஞ்சவந்தார் எண்டுறதே தெரியா மல் இருந்தது. ஒருத்தருமே இல்லாத உலகத்தில தனியா தவிச்சுக் கொண்டிருந்த எங்களுக்கு ஒரு துணை கிடைச்ச மாதிரி இருந்தது.

அவரிட்ட நீங்கள் எப்பிடி இஞ்ச வந்தனீங்கள் எண்டு கேட்டம் அவர் அழுது புலம்பினார். என்ன சொல்லுறார் எண்டே விளங்கேல்ல அப்பிடி நடுங்கிக் கொண்டிருந்தார். அவர் சொன்னதில் "பெரிசா அலை வந்து அடிச்சு எல்லாரையும் கொண்டு போட்டுது நான் தப்பீட்டன் தம்பி இப்ப நீங்களும் இஞ்சால நிண்டு அநியாயமாய் சாகப் போறீங்கள் ஓடித்தப்புங்கோ" எண்டு சொன்னதுமட்டும் கேட்டது. அதுக்குப்பிறகு தான் நாங்கள் முல்லைத் தீவில் வந்து நிக்கிறம் எண்டுறது தெரிஞ்சது. நாங்கள் முல்லைத்தீவு மணல் குடியிருப்பிலதான் போட்டைக் கொண்டந்து ஏத்தின நாங்கள்.

ஒரு மாதிரி அந்த ஐயாவைத் தூக்கிக் கொண்டு பஸ்ரான்டரடிக்குப் போக அங்க நிண்டு "அலைவரப்போகுது ஓடிவாங்கோ" என்று கைகாட்டி கத்திக்கொண்டிருந்தார்கள். இப்போது வந்த கடல் திரும்ப இழுத்



துக்கொண்டு போனது . கடலோடசேர்ந்து கனக்க சாமான்கள் போய்க்கொண்டிருந்தது. சனங்கள் கூடகடலோட இழுபட்டுப் போய்க்கொண்டிருந்தினம். என்ன செய்யிறது ஒருத்தரையும் காப்பாற்ற ஏலாமல் இருந்தது. எங்கட க்ண்ணால பார்த்துக் கொண்டிருக்கவே தண்ணியோட இழுபட்டு கடலுக்குள்ள பொடியள் எல்லாம் போய்க் கொண்டிருந்தது.

இப்பிடி நான் நினைக்கவே இல்லை. நாங்கள் கடலுக்க நிக்கேக்க இப்பிடி ஒண்டும் தெரியேல்ல. கடல் என்ன அமைதியாய் இருந்தது. கரைக்கு மட்டும் என்னெண்டு இப்பிடி நடந்தது. என்று தனது அனுபவத்தை கூறினார்.

அடுத்த பகுதியில் அதிகாலை வேளையே கடலில் தொழிலுக்காக புறப்பட்டு காலை 9.30 மணியளவில் கரைதிரும்பிக்கொண்டிருந்த கள்ளப்பாட்டைச்சேர்ந்த குடும்பஸ்தர் கடல் அலைகளின் குமுறலை கடலில் இருந்து நேரில் பார்த்திருந்தார். அத்தகைய அபாய நிலைக்குள்ளாலும் கரையை வந்தடைந்த அவர் எதனைக் கண்டார்? அவரின் குடும்பத்தினர் என்ன ஆனார்கள்? உள்ளிட்ட பல்வேறு விடயங்களை விபரித்திருந்தார் அவர் விபரித்த வற்றை அடுத்த பகுதியில் தருகிறோம்

(தொடரும்)

WUSC-SRI LANKA

# கனேடிய உலகப்பல்கலைக்கழக சேவை (வூஸ்க்) வடபிராந்தியம்





# எச்சத்தில் இருந்தும் எழுவோம்

## அழிந்து போன எமது தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம்

யுத்தஅனர்த்தத்தால் சிதைந்துபோன எமது தேசத்தின் உட்கட்டுமானங்களை மீள அமைக்குமுன்பே மீண்டும் இயற்கையின் சீற்றத்தால் அழிந்துபோன கட்டுமானத்தை மீள அமைக்கும் பாரிய பணி இன்று நம்முன்னே

**எனவே இளைஞர்களே யுவதிகளே உங்களை தயார்படுத்துங்கள் இப்பாரிய பணிக்காக!**

**நீங்கள் தயார்எனின் உங்களிற்கு உதவ நாம் தயார்**

2001 ஆம் ஆண்டு முதல் எமது அனுசரணையுடன் உள்ளூர் தொழிற்பயிற்சி நிறுவனங்களால் பயிற்றப்பட்டவர்கள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தற்காலிக வாழிடங்கள் அமைக்கும் பாரிய பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அடுத்த கட்டம் மிகப்பாரியது அழிந்துபோன உட்கட்டுமானங்களை மீள்கட்டுமானம்செய்ய வேண்டும் இதற்கு பாரிய அளவிலான திறன் தொழிலாளர்களை நாம் நம்மில் இருந்தே உருவாக்க வேண்டும்.

பாடசாலைக்கல்வியை விட்டு இடைவிலகியுள்ள ஆண்,பெண் இருபாலாரும் உங்களை ஓர் திறம்மிக்கவராக உருவாக்கி நாட்டிற்கும் வீட்டிற்கும் பயனுடையவராக்க அரிய சந்தர்ப்பம்.

உள்ளக பயிற்சி முடிந்தவுடன் சுயதொழில் செய்யக்கூடிய உபகரணங்கள் வழங்கப்பட்டு சம்பளத்துடன் கூடிய வேலைகளில் உடனடியாக அமர்த்தப்படுவர்.

நடாத்த உத்தேசிக்கப்பட்ட பயிற்சிகள்.

01. கட்டுமானப்பணியாளர்கள்

- மேசன் வேலை (Masonry)
- மரவேலை (Carpentry)
- வீட்டுமின் இணைப்பாளர் (Electrical Wiring)
- நீர்க்குளாய் பொருத்துனர் (Plumbing)
- அலுமினிய இணைப்பாளர் Aluminium Fitting)

02. மீன்பிடிவெளியிணைப்பு இயந்திரம் திருத்துதல் (out Boat repair)

03. மீன்பிடிஉபகரணம் திருத்துதல் (Fishing equipment repair)

04. நவீனமுறையிலான தையல் பயிற்சி (Advance tailoring)

பயிற்சிகள் முதற்கட்டமாக முல்லைத்தீவு மற்றும் மருதங்கேணிப்பகுதிகளில் அமைக்கப்படவுள்ள பல்திறன் விருத்தி பயிற்சி நிலையங்களில் உத்தேசிக்கப்பட்ட பங்காளர் நிறுவனங்களூடாக நடைபெறுவதுடன் கிளி. முல்லைமாவட்டங்களின் ஏனையபகுதிகளிற்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

பயிற்சிபெற விரும்புவோர் பயில விரும்பும் பயிற்சிநெறியின் பெயருடன் கூடிய சுயவிபரத்தை பின்வரும் ஏதாவது ஒரு முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*நிகழ்ச்சி திட்ட அலுவலர் (வூஸ்க்)*
*துணைப்பணிமனை*
*பிரதான வீதி*
*கரைச்சிகுடியிருப்பு முல்லைத்தீவு.*

*நிகழ்ச்சி திட்ட அலுவலர் (வூஸ்க்)*
*பிராந்திய அலுவலகம்*
*கோவில் வீதி*
*குருமன்காடு வவுனியா.*



தொலைபேசி இல. 024. 2222974 2223720

வூஸ்க் அனுசரணையுடன் ரீர்டோ நிறுவனத்தால் சென்ற வருடம் கட்டட நிர்மாணத்துறை சார்ந்த பயிற்சிகளில் பயிற்றப்பட்ட இளைஞர், யுவதிகள் கடல்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களால் அமைக்கப்படுகின்ற தற்காலிக வாழிடங்கள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதை கீழுள்ள படங்களில் காணலாம்.

(சி-11325)







# அரசாங்க அறிவித்தல்

## மாகாண சுகாதார சேவைகள்
## பிரதிப்பணிப்பாளர் பணிமனை-கிளிநொச்சி
## அழுக்குத்துணி கழுவுதல்-2005

2005 ஆம் ஆண்டு மா.சு.சே.பி.பணிப்பாளர் கிளிநொச்சி பிரிவிலுள்ள சுற்றயல்கூறு, பளைவைத்தியசாலைக்கு அழுக்குத்துணி கழுவுவதற்கான கேள்விகள் 2005.02.28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப் பெற்று முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புவோர் கேள்விப் பணமாக 400 ஐயும்கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100 ஐயும் செலுத்தி 2005.02.25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 4.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும் இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு கேள்வி விபரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்க மாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகைக்கு மேலாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விபரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ள முடியும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி,
மாகாண சுகாதார சேவைகள்
பிரதிப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி.11328)

# வாடகை வீடு தேவை

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டத்திற்குள் வீடு ஒன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விரும்புவதனால் வாடகைக்கு (நீர், மலசல கூட வசதிகளுடன்) வீடு கொடுக்க விரும்புவோர்கள் நேரிலோ அல்லது எழுத்து மூலமோ கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வைத்திய கலாநிதி,
த. சத்தியமூர்த்தி
மா.சு.சே.பி.பணிப்பாளர்,
கிளிநொச்சி

(சி11327)

# இதோ உங்களை நாடி வருகிறது அகரா வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்

Licence No 613





(சி.11326)

பல லட்சம் வாடிக்கையாளர்களைத் தன்வசம் கொண்டு பல்லாயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்பு இன்றி இருந்த போது அவர்களுக்கு நேசக்கரம் அளித்துத் தற்போது அவர்களின் குடும்பங்கள் சமூகத்தில் சரிசமமாக வாழ எமது நிறுவனம் உதவி புரிந்தது எம் வாடிக்கையாளர் அறிந்த விடயம்.

இந்த வகையிலே தற்போது யாழ். குடாநாட்டில் வாழும் அனைத்து இளைஞர், யுவதிகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றிடவும் மேலும் தொழில் தெரியாதவர்களுக்கு தொழிலினை குறுகிய காலப்பகுதிக்குள் தொழிற்பயிற்சியினை வழங்கி அவர்களுக்கு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொடுப்பதோடு மட்டுமல்லாமல் சர்வதேச சான்றிதழையும் வழங்குகின்றது.

## இது ஓர் அரிய சந்தர்ப்பம் ! தவற விடாதீர்கள் !!

*எமது நிறுவன அதிகாரிகள் நேரடியாக உங்களைச் சந்திக்கக் காத்திருக்கிறார்கள். எனவே நீங்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் வாய்ப்பினைப் பெற விரும்பினால் குறைந்த கட்டணத்துடன் குறுகிய காலப்பகுதிக்குள் தொழில் வாய்ப்பினைப் பெற்றுச் செல்லலாம்.*
*அத்துடன் பணிப்பெண்களுக்கான இலவச உடனடிப்பயணம் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் மலேசியா போன்ற நாட்டிற்கும் வேலை வாய்ப்பினைப் பெற்றுச்செல்லலாம்.*
*மேலும் எமது நிறுவனம் யாழ். குடாநாட்டில் எதிர்காலத்தில் இங்குள்ள இளைஞர்களுக்கு இலவசமாகப் பயிற்சிகளை வழங்கி அவர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளது.*
*அந்தவகையில்*

01. A/C Mechanic
02. வயறிங்
03. காப்பென்ரர்
04. மேசன்
05. டீசல் மெக்கானிக் போன்ற சுயதொழில்களையும் பழகுவதற்கும் ஆர்வம் உள்ளவர்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

*எனவே எமது நிறுவன அதிகாரிகள் உங்களுக்கான கருத்தரங்கு ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளார்கள். எனவே இளைஞர்கள் மற்றும் யுவதிகள், பெற்றோர்கள் அனைவரையும் வருகை தருமாறு பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.*

இடம் :- யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடம்
காலம் :- 13.02.2005 ஞாயிற்றுக் கிழமை
நேரம் :- முற்பகல் 9.30 மணி

*எனவே இந்த இலவச கருத்தரங்கில் ஆர்வலர்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறு தயவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.*



*எமது தலைமை அலுவலகம்*
*53, ஹாமி பாசமாவத்தை,*
*முதலாம் டிவிசன்,*
*மருதானை.*
*கொழும்பு -10*
*தொ.பே.இல.0112441336, 0115375566*

*மேலும் நீங்கள் யாழ்ப்பாணத்தில்*
*நாகவி கிறீம் ஹவுஸ்,*
*இல -133/10, கே.கே.எஸ் றோட்.*
*யாழ்ப்பாணம்.*

எனவே உங்கள் வருகையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்படி விலாசத்தில் உங்கள் பதிவினை மேற்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகிறோம்.

இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

## மாபெரும் பரிசுப்போட்டி

நீங்கள்
செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

## அம்மன் களஞ்சியம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077

அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11254)



சுனாமியால் பாதிக்கப்பட்ட அந்தமான் தீவு மக்களுக்கு நிவாரண நிதி திரட்டும் நிகழ்ச்சியில் பொக்கிஷமாகப் பாது காத்து வைத்திருந்த கிரிக்கெட் துடுப்பு ஒன்றை ஏலம் விட்டார் ஸ்ரீவோ. அவரது சாதனைகளைப் பாராட்டி அவுஸ்திரேலிய பழங்குடி மக்கள், விஷேடமாகத் தயாரித்து அன்புடன் வழங்கிய வண்ணத் துடுப்பு அது. அந்த அன்புப் பரிசை இந்த நல்ல விடயத்துக்காக மனமுவந்து வழங்கி விட்டார் ஸ்ரீவோ. கடந்த மாதம் மெல்போர்னில் நடைபெற்ற சுனாமி நலநிதி கிரிக்கெட் போட்டியில் ஸ்ரீவோ கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு நாள் போட்டிகளிலும் பொதுவான நடுவர்களை நியமிக்க பாக். கோரிக்கை



டெஸ்ட் போட்டியைப் போன்று ஒரு நாள் ஆட்டங்களிலும் "பொதுவான நடுவர்களையே பணியில் அமர்த்த வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அதை பரிசீலிப்பதாக சர்வதேச கிரிக்கெட் சபை கூறியுள்ளது. பொதுவான நடுவர்களை நியமிக்கவேண்டும் என்ற பாகிஸ்தானின் கோரிக்கைக் கடிதம் வந்துள்ளது. அது குறித்து சரியான தருணத்தில் முறைப்படி ஆய்வு செய்யப்படும். அநேகமாக லோர்ட்ஸில் மே மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி கிரிக்கெட் கமிட்டி கூட்டத்தில் இப்பிரச்சினை விவாதிக்கப்படும்" என ஐ.சி.சி செய்தித் தொடர்பாளர் ஜான்லாங் அவுஸ்திரேலிய அசோஸியேட்டட்ப்பிரஸ் நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா,மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளுடன் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் சமீபத்தில் விளையாடியது பாகிஸ்தான்.அப்போது அவுஸ்திரேலியாவுக்கு சாதகமாக சில தீர்ப்புகள் அமைந்ததாகப் புகார்கள் எழுந்தன.

இதையடுத்து டெஸ்ட் போட்டிக்கான நடைமுறை மாதிரி இரு அணிகள் விளையாடும்போது அந்நாட்டைச் சாராத நடுவர்கள் ஒரு நாள் போட்டிகளிலும் பணியில் அமர்த்த வேண்டும் என பாகிஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது ஒரு நாள் ஆட்டங்களில் ஒரு உள்ளூர் நடுவரும், ஒரு வெளிநாட்டு நடுவரும் பணியாற்றி வருகின்றனர்.



சுனாமி பாதித்த பகுதிகளைப் பார்வையிட அவுஸ்திரேலிய அணியின் சுழற் பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் இலங்கை வந்துள்ளார்.கடந்த புதனன்று கொழும்பு வந்த இவர் அங்குள்ள இளம் வீரர்களுக்குப் பந்து வீசும் முறை பற்றி ஆலோசனைகள் வழங்கினார்.

# பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு-ஸ்ரீவ்வோ



பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்குப் பிரகாசமான வெற்றி வாய்ப்பு உள்ளதாக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ்வோ தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டும் நோக்கில் ஸ்ரீவ்வோ தற்போது இந்தியா சென்றுள்ளார். கொல்கத்தாவில் அவர் நிருபர்களிடம் பேட்டி அளிக்கையில், இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் மோதல் ரசிகர்கள் மத்தியில் இப்போதே அதிக எதிர்பார்ப்பை உண்டாக்கி இருக்கிறது. இரு அணியிலும் திறமை வாய்ந்த வீரர்கள் பலரும் இருக்கிறார்கள். ஆனால், சொந்த மண்ணில் இந்திய அணி எப்போதுமே ஆதிக்கம் செய்யும். அந்த வகையில் பார்த்தால் இந்தியாவுக்கு இந்தத் தொடர் அதிக சாதகமாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்திய அணியில் உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சாளர்கள் இருக்கிறார்கள். பந்து வீச்சில் குறிப்பாக, இர்பான் பதான் இந்திய அணிக்குக் கிடைத்த வரப்பிரசாதம். பாகிஸ்தான் அணியிலும் திறமையானவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களை எப்போதும் ... சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்... ஸ்தான் பெரிய அளவில் சோதனை கொடுக்கவில்லை ... ிய மண்ணிலும் பாகிஸ்தான் அணிக்கு சோதனை காத்திருப்பது குறிப்பிடத்தக்கது என்றார்.

## இங்கிலாந்துக்கு கௌரவமான தோல்வி

கெவின் பீட்டர்சன் அற்புதமாக விளையாடியும் தென்ஆபிரிக்காவுக்கு எதிரான ஐந்தாவது ஒரு நாள் ஆட்டத்தில் இங்கிலாந்தால் வெற்றி காண முடியவில்லை.

மேற்கு லண்டனில் புதன் கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் தென் ஆபிரிக்கா ஏழு ஓட்டங்களால் இங்கிலாந்தைத் தோற்கடித்தது. முதலில் ஆடிய தென் ஆபிரிக்கா அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஏழு விக்கெட்டுகளை இழந்து 311 ஓட்டங்களைக் குவித்தது.

ஸ்மித் ... ஓட்டங்களைக் குவித்து க... வரை ஆ... மிழக்காமல் இருந்தார். கடைசி மூன்று ஆட்டங்களில் அவர் அடித்துள்ள 2 ஆவது சதம் இது என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து ஆடிய இங்கிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டம் குவித்தது. என்றாலும் வெற்றிக்கு அந்த ஓட்டங்கள் போதுமானதாக அமையவில்லை.

# மைக்கல் வோன் மீது குறிவைக்கும் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள்



எதிர்வரும் ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோன் மீது அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் குறிவைத்திருப்பதாக முன்னாள் இங்கிலாந்து பயிற்சிக் கல்லூரிப் பணிப்பாளர் றொட் மார்ஷ் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. உலக சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் குறிப்பிடும்போது ;வோன் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதை அண்மைய போட்டிகளில் நிரூபித்துள்ளதாகவும், அவர் மீதே ஆஸி பந்து வீச்சாளர்கள் கண்வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். 2002-03 காலப் பகுதியில் நடைபெற்ற ஆஷஸ் போட்டியின் பின்னர் வோன் சிறப்பாக ஆடிவருகிறார் என்றும், உலகின் முதல்தர பந்து வீச்சாளர் கிளென் மெக்ராத் இவர் மீது இலக்கு வைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியாவுடன் தோல்வியைச் சந்தித்திருந்தாலும் வோன் மூன்று சதங்களுடன் 633 ஓட்டங்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. தரவரிசையில் 27ஆவது இடத்தை வகிப்பினும் மைக்கல் வோன் 2003ஆம் ஆண்டு தலைமைப் பதவியை ஏற்ற பின்னர் அவர் ...

96 டெஸ்ட் ... வெற்றிபெற வோ... வோனையே நம்பி...

# கழகத்தை விலைக்கு வாங்க முயற்சி எதிர்த்து ரசிகர்கள் போராட்டம்




மல்கம் கிளசருக்கெதிரான ஆர்ப்பாட்டம் நடாத்த டெர்பி மைதானத்தை ஆக்கிரமிக்கக்கூடாது என மஞ்செஸ்டர் உதைபந்தாட்டக் கழகத்தை மஞ்செஸ்டர் மாநகரசபை உத்தரவிட்டிருக்கிறது.

கிளசர் நேற்று நடைபெற்ற கழக சந்திப்பின் போது கழகத்தை விலைக்கு வாங்க முயற்சி செய்தது தொடர்பாக ஆராயவிருந்தது. கிளசர் ஏற்கனவே அதன் 28 வீதமான பங்குக்கு உரிமை கொண்டிருக்கிறார்.

எனினும் அவருக்கெதிராக எந்த ஆர்ப்பாட்டத்தையும் நடத்தத் தீர்மானிக்கவில்லை என மாநகரப் பேச்சாளர் தெரிவித்துள்ளதுடன் கழக ரசிகர்களிடமிருந்து ரசிகர்களுக்கு கைமாறுவதை ஆட்சேபிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதற்கு முன்பு ஒல்ட்ரப்பர்ட் கழகத்தையும் அமெரிக்க கோடிஸ்வரர் ஒருவர் வாங்கவிருப்பதாகவும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

நாளை நடைபெறும் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறு பொலிசார் கூறியதையும் ரசிகர்கள் மறுத்ததுடன் அமைதியான போராட்டம் ஒன்றை நடத்தவென மைதான வாசலில் அமர்ந்திருக்கின்றனர்.

# இத்தாலி –அயர்லாந்து அணிகள் வெற்றி

ஐரோப்பிய நட்புறவுக் கால்ப்பந்துப் போட்டியில் ஆர்ஜென்டீனா, ஜேர்மனியையும், சுவீடன், பிரான்ஸ் அணியையும் சமன் செய்தன. நட்பு ரீதியிலான ஐரோப்பிய கால்பந்துப் போட்டி பல்வேறு நாடுகளிலும் நடந்தது. டெஸல்டிராப் நகரில் கடந்த புதன்கிழமை நடந்த போட்டியில் உலகின் முதல் நிலை அணியான ஜேர்மனி, ஆர்ஜென்டீனா அணியை எதிர்த்து விளையாடியது. இப் போட்டியில் இரு அணிகளும் தலா இரண்டு கோல் அடிக்க ஆட்டம் சமனில் முடிந்தது. ஆர்ஜென்டீனா அணியில் கிறிஸ்போ அபாரமாக ஆடி இரண்டு கோல் அடித்து அணியைத் தோல்வியில் இருந்து மீட்டார். பரிசில் நடந்த போட்டியில் சுவீடன், பிரான்ஸ் அணிகள் மோதின. இப்போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது. லண்டனில் நடந்த இங்கிலாந்து, நெதர்லாந்து இடையேயான போட்டி கோல் ஏதும் அடிக்கப்படாமல் சமனில் முடிந்தது. தவிர இத்தாலி 2-0 என்ற கோல் கணக்கில் ரஷ்யாவையும், அயர்லாந்து 1-0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் அணியையும் வென்றது.

## ஒழுங்கீனமாக நடந்தார்கள்

# அக்தர் உட்பட மூவருக்கு பாக். அபராதம்

தவறு செய்த கிரிக்கெட் வீரர்களுக்கு அணி நிர்வாகமே அபராதம் விதித்த சம்பவம் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் நிகழ்ந்துள்ளது.

சமீ... ல் முடிவுற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் சொஹைப் அக்தர் உட்பட மூன்று வீரர்கள் தண்டனை (அபராதம்) பெற்றுள்ளது தற்போது தெரிய வந்துள்ளது.

மூத்த வீரர் சொஹைப் அக்தர் மட்டுமல்லாது யாசீர் ஹமீது, சல்மான் பட் ஆகியோரும் டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக அந்தத் தண்டனையைப் பெற்றுள்ளனர். காரணம் குறிப்பிட்டநேரத்துக்குப் பயிற்சிக்கு வராததே ஆகும்.



அண்மையில் வீழ்ச்சிகளைப் பொருட்படுத்தாது தன் மீது நம்பிக்கை வைத்திருக்கும் ரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்கும் இங்கிலாந்து கால்பந்தாட்ட அணித்தலைவர் டேவிட் பெக்காம்.

# ஐதராபாத் ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் சானியா

ஐதராபாத் ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டி ஆந்திர தலைநகர் ஐதராபாத்தில் நடைபெற்று வருகிறது. இதன் ஒற்றையர் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் மாலை நடந்தது.

அவுஸ்திரேலிய ஓபனில் 3ஆவது சுற்றுக்கு நுழைந்து சாதனை படைத்த இந்திய வீராங்கனை சானியா மிர்ஷா காலிறுதியில் இஸ்ரேலைச் சேர்ந்த தஜிபோராவை எதிர்கொண்டார். உள்ளூர் ரசிகர்களின் ஆதரவினால் சானியா மிகவும் அபாரமாக விளையாடினார். அவர் 4-6, 6-3,7-6 (7-5) என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றார்.

மற்ற காலிறுதி ஆட்டங்களில் மரியா கிரிலென்கோ, அன்னா லெனா, அல்யோனா ஆகியோர் வெற்றி பெற்றனர்.




# சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ச. பிரசாத் புதிய சாதனை

சென்ஜோன்ஸ் கல்லூரியில் 40 வருடங்களுக்கு முன்னர் 19 வயதுப் பிரிவு 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் ஏற்படுத்திய சாதனையை இவ்வாண்டு இடம்பெற்ற பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டியில் முறியடிக்கப்பட்டுள்ளது.

19 வயதுப் பிரிவினருக்கான 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் 1964ஆம் ஆண்டு எம். தெய்வேந்திரா 16.8 செக்கனில் ஓடி ஏற்படுத்திய சாதனையை தற்போது 16.3 செக்கனில் ஓடி ச.பிரசாத் என்ற மாணவனே முறியடித்தவர் ஆவார்.

இதேபோன்று 17 வயதுப் பிரிவில் 1998ஆம் ஆண்டு 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் இ. சுதர்சன் 18.1 செக்கனில் ஓடி ஏற்படுத்திய சாதனையை இவ்வருடம் 13.5 செக்கனில் ஓடி தி. தர்ஷன் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (41)

## சிந்தனைக்கு



இராணுவ ஆதிக்கத்திற்கும், அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக்கொடுத்ததில்லை; கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 12-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# பெரும்விலை!

"சமாதானத்தைக் காப்பாற்றுவதற்காகப் புலிகள் பெரும் விலை கொடுக்க வேண்டியுள்ளது" என்ற அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் கூற்றுக்களே அண்மைய அரசியல் யதார்த்தமாகியுள்ளது. அவ்வாறு இல்லாது விடில் மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் இ.கௌசல்யன் போன்றவர்களை விடுதலைப்புலிகள் இழந்திருக்க மாட்டார்கள்.

சமாதானத்தைக் காப்பதற்கான பெரும் விலையாகவே கௌசல்யன் போன்றவர்களின் உயிர் இழப்பு இருந்தது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இவை சமாதானத்திற்காக –சமாதானத்தின் மீதான நம்பிக்கையினால் இழக்கப்பட்ட உயிர்கள் ஆகும். சமாதானத்தின் மீதான நம்பிக்கை அற்றிருந்திருப்பின் கௌசல்யன் போன்றவர்கள் இவ்வாறு உயிர் இழக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கமாட்டாது.அதற்கும் அப்பால் இவ்வாறான தொரு சந்தர்ப்பம் நிகழ்ந்திருப்பின் அதன் பின்னரான நிகழ்வுகளும் இது போன்று இருந்திருக்கமாட்டாது.

சமாதானத்திற்காக விடுதலைப்புலிகள் பெரும் விட்டுக் கொடுப்புக்களையும் செய்யவேண்டியும், பாரிய இழப்புக்களை சந்திக்க வேண்டியும் உள்ளது என்பது வெளிப்படையானதொன்று, மறுவளமாக சமாதானம் என்பது அரசால் இருவகையில் பயன்படுத்தப் படுகின்றது.

ஒரு புறத்தில் யுத்த நிறுத்தம் சமாதான உடன்பாடு என்பவற்றைப் புலிகளின் பலவீனம் அன்றி புலிகள் மீதான அழுத்தத்தின் வெளிப்பாடு என்ற ரீதியில் அரசாங்கம் எடுத்துக் கொண்டிருந்தமை. அதாவது புலிகள் மீதான தமது நடவடிக்கைகளுக்கு எதிரானதன்றி பதிலடியான நடவடிக்கைகளைப் புலிகள் மேற்கொள்ள வாய்ப்பில்லை என்ற நம்பிக்கை,துணிவு.

அடுத்ததாக ஆதாரமற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தமக்கும், நடவடிக்கைகளுக்கும் தொடர்பு இல்லை என்பது போன்று காட்டிக் கொள்வது. அதாவது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பலவீனமான அதிகாரங்கள் வரையறைகள் என்பனவற்றை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது.

எடுத்துக்காட்டாக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் புலிகள் மீதான தாக்குதலுக்கும்– அரசிற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை, இத்தகைய தாக்குதகள் போர் நிறுத்த மீறலாகக் கொள்ளத்தக்கதோ, போர் நிறுத்த மீறலோ அல்ல என்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிக்கை விடும்வகையில், ஆதாரம் அற்றவகையில் நடவடிக்கைகளை கொண்டால் போதும் என்ற நிலையில் அரசாங்கம் நடந்து கொள்கின்றமை.

சிறிலங்கா அரசும் சரி, அதன் ஆயுதப்படைத்தரப்பும் சரி என்றுமே சமாதானத்திற்கு விரோதமாகவும், விடுதலைப்புலிகள் தொடர் பான தப்பான மதிப்பீட்டிலுமே இருந்துவந்துள்ளன; இருந்தும் வருகின்றன. அதாவது விடுதலைப்புலிகள் சமாதானத்தின் பால் காட்டும் ஆர்வத்தையும், விடுதலைப்புலிகள் கடைப்பிடிக்கும் பொறுமையையும் புலிகளின் பலவீனமாகவே அரசு கருதியதுண்டு.

இது யுத்த காலத்திற்கும் கூடப் பொருத்தப்பாடானதாகவே இருந்தது. அதாவது புலிகள் மேற்கொள்ளும் தந்திரோபாய நடவடிக்கைகளை குறிப்பாகப் பின்வாங்குதல், யுத்த காலத்தில் விடுக்கப்பட்ட சமாதானத்திற்கான அழைப்புக்கள் போன்றவற்றை அரசு புலிகளின் பலவீனமாகவே கருதியதுண்டு. இதன் காரணமாக அரசு தனது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் சென்றதுமுண்டு.

ஆனால் கடந்த காலத்தில் ஒரு தடவை அல்ல பல தடவை மீண்டும் மீண்டும் புலிகள் அரசாங்கத்தின் கணிப்பீட்டைத் தவறானது என்பதை நிருபித்துக் காட்டியுள்ளனர். இவ்வேளைகளில் அரசாங்கம் பேரிழப்புக்களைச் சந்தித்ததும் உண்டு. ஆனால் ஒன்று வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போன்று அரசாங்கம் ஒரே தவறை மீண்டும் மீண்டும் செய்யாமல் இல்லை.

இத்தகையதொரு நிலைப்பாட்டுடனேயே கடந்த மூன்றாண்டு காலப் போர் நிறுத்தத்தையும் அரசாங்கம் கைக் கொண்டு வந்துள்ளது. அதாவது விடுதலைப்புலிகள் பலவீனம் அடைந்துள்ளனர், அன்றி விடுதலைப்புலிகள் செயற்படமுடியாத அளவில் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். வெளிநாட்டு, உள்நாட்டு அமுத்தங்கள் காரணமாகவே விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்தத்திற்கு உடன்பட்டுள்ளனர். என்பதும் சமாதான முயற்சிகளில் அக்கறை காட்டுகின்றனர் என்பதுமான மதிப்பீடாகும்.

ஆனால் அரசாங்கம் இத்தகையதொரு கணிப்பீட்டின் அடிப்படையிலேயே தனது எதிர் கால நடவடிக்கையையும் தொடருமானால் அரசாங்கம் அதற்குக் கொடுக்கப்போகும் விலை மிகப் பெரிதாகவே இருக்கலாம். அப்பொழுது புலிகள் இயக்கம் பலவீனம் அடைந்து விடவில்லை. அது சமாதானத்திற்காக அர்ப்பணிப்புச் செய்தது. அமைதி காத்தது என்பதை சிறிலங்கா அரசு மட்டுமல்ல சிறிலங்கா அரசு போன்று புலிகள் பலவீனம் அடைந்து விட்டார்கள் என வேறு யாராவது கருதியிருப்பவர்களேயானால் அவர்களுக்கும் புலிகள் பற்றிப் புரியவைப்பதாக இருக்கும்.

# போராளிகளின் படுகொலைக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்

## -வாகரை மக்கள் கண்டனம்

07.02.2005 அன்று அரச கட்டுப்பாட்டுப் பகுதியான வெலிகந்தவில் நிகழ்ந்த மட்டு.அம்பாறை, மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் அவர்கள் உட்பட நான்கு போராளிகளினதும் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு மற்றும் அவரது சாரதி ஆகியோரின் படுகொலைக்கு அரசே முழுப் பொறுப்பு என்பதை நாம் வலியுறுத்தி வருகின்றோம். இவ்வாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு வாகரைப் பிரதேச மக்கள் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது ;

யுத்தத்தை நோக்கிப் புலிகளை இழுத்தச் செல்லும் கபட நோக்குடன் அரச நிர்வாகமும், படையினரும் மேற்கொண்டு வரும் இவ்வாறான முயற்சிகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசும், விடுதலைப் புலிகளும் மேற்கொண்ட யுத்த நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம் ஆயுதக் குழுக்களை நிராயுத பாணியாக்குவது என்பதும் முக்கியமான விடயம்.

எனினும் மக்கள் விரோத ஆயுதக் குழு ஒன்றுக்கு ஆயுதம் வழங்குவதும் அவர்களுக்கு தகவலும், பாதுகாப்பு வழங்குவதும் மிக மோசமான யுத்த நிறுத்த மீறல் என்பதை இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்ட இந்த இருதரப்பினரின் ஒரு தரப்பினராகிய தாங்களுக்கும் மற்றும் சர்வதேச சமூகத்திற்கும் சுட்டிகாட்ட விரும்புகின்றோம். ஏற்கனவே எமது பகுதிக்கு புனர் நிர்மாணப் பணிகளுக்கு வந்த லெப்.கேணல் பாவா,மேஜர் ஜெகா ஆகிய போராளிகளின் வருகை பற்றிய தகவல்களை இந்த மக்கள் விரோத ஆயுதக்குழுவுக்கு வழங்கி, அவர்களது சாவுக்குக் காரணமான படையினரின் செயற்பாட்டை நாம் அறிவோம். அதாவது போரளிகளின் போக்குவரத்துப்பற்றிய தகவல்களை இவ்வாறான ஆயுதக் குழுவிற்கு வழங்கியமை இது தான் முதற்தடவை அல்ல. என்பதை நாம் சுட்டிக்காட்டுகின்றோம். நாம் தற்போது வலியுறுத்துவது வெலிக்கந்த சம்பவமே. இதுவே இறுதிச் சம்பவமாக அமையட்டும். யுத்தத்தினாலும்,சுனாமியினாலும் நொந்து போயுள்ள எங்களை வேதனைப் படுத்தும் இவ்வாறான செயற் பாடுகளை இத்துடனாவது நிறுத்திக் கௌரவமான சமாதானம், பாகுபாடுள்ள புனர் நிர்மாணப் பணிகளின் பால் பூரண கவனத்தை அரசு திருப்ப வேண்டும். இவ்வாறான சம்பவங்கள் தொடருமாக இருந்தால் நாங்கள் எமது தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதைத் தங்களுக்கு வலியுறுத்திக் கூறுகின்றோம்.

# கொபி அனானின் கண்டனச் செய்திக்கு நாட்டுப்பற்றாளர் இயக்கம் கண்டனம்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கொபி அனான் விடுதலைப் புலிகளின் மட்டு.அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டமையைக கண்டிக்கும் வகையில் விடுத்துள்ள அனுதாபச்செய்திக்கு நாட்டுப்பற்றுடைய தேசிய இயக்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது தொடர்பான அந்த அமைப்பு கூறுகையில், இதற்கு முன்னர் இலங்கையில் அரசியல் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்ட வேளையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் இவ்வாறான அறிக்கையினை வெளியிடவில்லை எனவும் அது கூறியுள்ளது. இதே வேளை ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளரின் அனுதாபச் செய்திக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையில் மகஜர் ஒன்றையும் அந்த அமைப்பு ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்பு அலுவலகத்தில் நேற்றுக்கையளித்தது. இந்த மகஜரை ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மிக்கேல்வேமியோவின் சார்பில் அவரது பிரதிநிதி ஒருவர் எல்லேகுணவன்ச தேரரிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

## —சுனாமி அனர்த்தம் காரணமாக—

# சாரதி அனுமதிப் பத்திரம், வாகனச் சான்றிதழ் இழந்தவர்கள் பெற ஒழுங்கு

சுனாமி அனர்த்தத்தினால் சாரதி அனுமதிப் பத்திரங்களை, வாகன உரிமைச் சான்றிதழ்களை இழந்தவர்கள் அவற்றை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுற்று நிருபம் ஊடாக அறியத்தந்துள்ளார்.

அ.சாரதி அனுமதிப்பத்திரங்களில் 'A' எழுத்துக்களை உடையவர்களுக்கு நாரகேன் பிட்டியிலும், 'A' எழுத்துக்களில் இல்லாத சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கு 'ஹெஹெரவிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆ.தற்காலிகமாக வழங்கப்பட்டு அதற்கான கோவைகள் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பப்படாமல் உள்ள தற்காலிக சாரதிப் பத்திரங்களின் விடயத்தில் அந்தந்த மாவட்ட மோட்டார் வாகன பரிச்சகரினால் நடவடிக்கை எடுக்கப் படும் சாரதி அனுமதிப் பத்திரங்க ளைப்பெறுவதற்கு:- $2^{11}$x $21/2^{11}$அளவுகளைக் கொண்ட மூன்று புகைப்படங்களும், அவைகளின் மறுபுறத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கம், பெயர் ஆகியவைகளைக் குறிப்பிட்டு, கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப் பட்டிருப்பதோடு விண்ணப்பதாரி சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்டுள்ளார் என கிராம அலுவலரினால் உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வாகன பதிவுச்சான்றிதழ்களை மேற்படி அனர்தத்தத்தினால் தவற விட்டவர்களின் பதிவுகளும் மோட்டார் வாகனப் போக்குவரத்து தலைமைக் காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு பாதிப்பிற்கு உள்ளானவர் என்பதனை உறுதிப்படுத்தும் கடிதத்தோடு, உரிமையை உறுதிப்படுத்தும் புகைப்படங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பொலிஸ் முறைப்பாடு அவசியமற்றதாகும்.

இவைகள் தொடர்பான மேலதிக விபரங்களை கிளிநொச்சி மாவட்டச செயலக மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கிளையில் உள்ள விளம்பரப் பலகையில் பார்த்து அறிய முடியும் என கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித் துள்ளார்.

# கிளி. அரச வங்கியில் பணமோசடி செய்த இளைஞன் காவல் துறையினரால் கைது

கிளிநொச்சியில் இயங்கிவரும அரச வங்கியில் பண மோசடிசெய்த இளைஞனை தமிழீழ காவல் துறையினர் கைது செய்துள்ளதுடன் மேற்படி வங்கியில் மோசடி செய்த பணத்தினையும் மீட்டுள்ளனர். கடந்த 7 ஆம் திகதியன்று கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்கள் அதிகரித்திருந்த வேளை நபர் ஒருவர் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து வங்கியிலிருந்து மோசடி மூலம் ஐந்து இலட்சத்து இருபதினாயிரம் ரூபா பணத்தினை எடுத்துச்சென்றுள்ளார் 8ஆம் திகதியன்று வங்கியாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்து துரித நடவடிக்கையில் இறங்கிய கிளிநொச்சி காவல் பணிமனையினர் வட்டக்கச்சிப் பகுதியில் வைத்து 9 ஆம் திகதி இரவு சந்தேக நபரைக்கைது செய்தது துடன் வங்கியில் மோசடி மூலம் எடுத்த பணத்தினையும் முற்று முழுதாக மீட்டுள்ளனர். அத்துடன் இம் மோசடியுடன் தொடர் புடையதாகக் கருதப்படும் மற்று மொரு சந்தேக நபரையும் உருத் திரபுரத்தில வைத்துக்கைது செய்துள்ளனர். சந்தேக நபர்கள் இருவரையும் கிளி.காவல்பணிமனையினர் நேற்றையதினம் கிளி.மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியதுடன் சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்ட பணத்தினையும நீதிமன்றில் கையளித்துள்ளனர். விசாரணைகளை மேற்கொண்ட கிளி.மாவட்ட நீதியாளர் சந்தேக நபர்கள் இருவரையும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும் படி உத்தரவிட்டுள்ளார். (சோ)

# கிளி.யில் நடைபெற்ற நினைவு நிகழ்வுகள்...........







## அரசியல்....

பயணத்தை அவர் மேற்கொண்டார். இன்று சந்திப்பில் குறிப்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம் உட்பட 6 பேரின் படுகொலை தொடர்பாகவும், சுனாமியால் தமிழர் தாயகப் பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகவும், முக்கியமாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கிடையில் யசூசி அகாசி நேற்று முன்தினம் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொழும்பில் சந்தித்தார்.

நேற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் தனித்தனியாக அவர் சந்தித்தார்.

இதேவேளை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் எதிர்வரும் சில தினங்கள் மட்டக்களப்பில் தங்கியிருப்பார் எனத் தெரிய வருகின்றது. இங்கு தங்கியிருக்கும் நாட்களில் பல்வேறு சந்திப்புக்களிலும் அவர் கலந்து கொள்வார் என்று தெரிய வருகின்றது.

## யுத்தம்....

இதன் பின்னர் கொக்குவெளிப் பிரதேசத்தில் இராணுவத்தினருக்கான பயிற்சி முகாம் ஒன்றினைத் திறந்து வைத்து இராணுவ மரியாதையினைப் பெற்றுக் கொண்டார்.

இதன் பின்னர் இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள் மத்தியில் உரையாற்றுகின்றபோது இன்று உள்ள சமாதானச் சூழ்நிலை நிலைத்து இருக்குமா? அல்லது போர் ஒன்று ஏற்படுமா? என்று தெரியாது. இராணுவத்தினர் போர் நிறுத்த உடன்படிக்கையினைச் சரியான முறையில் கடைப்பிடித்து வருகின்றனர். தொடர்ந்தும் இவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும்.

கடந்த கால யுத்தத்தின்போதும் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போதும் இராணுவத்தினருக்கு அதிக இழப்பு ஏற்படக் காரணம் போதிய பயிற்சி இன்மை. எனவே எதிர்வரும் காலத்தில் அவ்வாறு எதுவும் நடைபெறக் கூடாது என்றும் தெரிவித்தார்.

இதன் பின்னர் செட்டிகுளம் பகுதிக்கும் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

சாந்த கொட்டே கொடவின் விஜயம் தொடர்பாக செய்தி சேகரிப்பதற்கு தமிழ் பத்திரிகையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை

கொக்குவெளிப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமையினைக் கருத்திற்கொண்டே இந்த அனுமதி மறுக்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

சாந்த கொட்டேகொடவின் வவுனியா விஜயம் காரணமாக வவுனியா நகர்ப் பகுதியும், அவர் பிரயாணம் செய்யும் வீதிகளும், பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (21)

## லெப்....

தடைந்து அங்கு மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு வீரவணக்க நிகழ்வுகள் இடம் பெற்றது.

பொதுச் சுடரினை மூன்று மாவீரர்களின் தாயார் திருமதி பொன் .தியாகம் ஏற்றி வைக்க மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கிளி/மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் கலைவாணன் கிளி/மாவட்ட அரச சார் பற்ற நிறுவன இணையத் தலைவர் கணேச பிள்ளை கிளி.மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் பாபு ஆகியோர் ஈகச்சுடரேற்றி மலர் மாலையை அணிவித்தனர். தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தினார். அடுத்து கிளி. மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் வீரவணக்கக் கூட்டம் இடம் பெற்றது.

தலைமையுரையினை அடுத்து நினைவுரையினை கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர் சு.பசுபதிப்பிள்ளை நிகழ்த்தினார். தொடர்ந்து வணக்க உரையினை தமிழீழ மகளிர் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி, அரசறிவியற் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா, திருமதி. அனுஷியா மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து பொது மக்கள் போராளிகள், பாடசாலை மாணவர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

பூநகரியில் நினைவு நிகழ்வு காலை 9.00 மணிக்கு பூநகரி ம.வி. ஆசிரியர் சி.சுரேஸ்குமார் தலைமையில் ஆரம்பமானது.

சிறப்பு அஞ்சலியுரையினை பூநகரி ம.வி. அதிபர், பூநகரி ம.வி. பாடசாலை ஆசிரியர் விசுவாசம், பூநகரி கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேங்கைத் தமிழன், பாடசாலை மாணவி பிரியதர்சினி, பூநகரி ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் ந..பாலசுப்பிரமணியம், தொழில் நுட்பக் கல்லூரி கணினி ஆசிரியர் த.தயாரூபன் ஆகியோர் ஆற்றினர்.

பரந்தன் பிரதேசத்தில் கிளி.குமரபுரம் இந்து மகாவித்தியாலத்தில் உமையாள் புரம் மாதர் சங்க உறுப்பினர் விக்டர் சாந்தி தலைமையில் நடைபெற்றது.

தூயவன் அரச அறிவியல் கல்வித் துணைப் பொறுப்பாளர் புலிமறவன் சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து மாதர் சங்க தலைவி நாகேஸ்வரி, வர்த்தக சங்க உறுப்பினர் கண்ணன் ஆகியோர் அஞ்சலி உரையை நிகழ்த்தினர்.

வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் லெப்.கேணல்.கௌசல்யன் உட்பட ஐந்து மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டமானது காலை 9.30 மணிக்கு தேசிய எழுச்சிப் பேரவை செயலர் பொன்னுத்துரை தலைமையில் இடம்பெற்றது.

கருத்துக்களை தேசிய எழுச்சி பேரவை செயலர் பொன்னுத்துரையும், இராமநாதபுர மகாவித்தியாலய முதல்வர் இரத்தினகுமாரும், சிறப்புரையினை வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழ நிலவனும் நிகழ்த்தினர்.

மட்டு - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப் கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளும் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் - சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து முழங்காவிலில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

காலை 10.00 மணியளவில் நாச்சிக்குடாச் சந்தியில் இருந்து முழங்காவில் மாவீரர் மண்டபம் வரை பெரும் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. இதன்போது இவர்களின் திருவுருவப் படங்களை தாங்கியவாறு பேரணி நகர்ந்தது.

முழங்காவில் மாவீரர் மண்டபத்தை ஆர்ப்பாட்ட பேரணி வந்தவுடன் வீரவணக்கக் கூட்டம் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் தங்கராசா தலைமையில் இடம் பெற்றது. அஞ்சலி உரையினை முழங்காவில் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழரசன், ஆசிரியர் சசிக்குமார், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் நவரத்தினம், வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ஆகியோர் நிகழ்த்தினர்.

(சோ,கு,14,12,த)

## மன்னாரில்....

நிலை கொண்டிருந்த சிறிலங்காப் பொலிசார் மேற்படி இளைஞன் மீது உரிக்காத தேங்காயினால் தாக்கியுள்ளனர். இதன் காரணமாக மயக்கமடைந்து அவ் இளைஞன் நிலத்தில் வீழ்ந்ததும் மூன்று சிறிலங்கா பொலிசார் இணைந்து இளைஞனின் மர்ம உறுப்பினை கத்தி பிளேட் போன்றவற்றால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர். பின்னர் அவ் இளைஞனை அவ்விடத்திலுள்ள கிணறு ஒன்றின் அருகே துவாய் ஒன்றினால் மூடிப் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

அவ்வேளை அவ்வழியினால் வந்த ஒருவர் அப்பகுயில் முனகல் சத்தத்தைக்கேட்டு அவ்விடத்தில் சென்று பார்த்தபோது குறித்த இளைஞன் இரத்தம் பீறிட்ட நிலையில் உயிருக்காகப் போராடியபடி காணப்பட்டுள்ளார். இதனையடுத்து இது பற்றி அப்பகுதி மக்களிடம் தெரிவித்த போது மக்கள் இளைஞனை மீட்டு மன்னார் மாவட்ட மருத்துவ மனைக்கு எடுத்துச்சென்றதுடன், தாழ்வுபாடு பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டுப் பொலிசாரின் இவ் அடாவடித்தனத்தைக் கண்டித்து கோசம் எழுப்பியதுடன் தடைகளைப் போட்டு ரயர்கள் போன்றவற்றை எரித்து மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

மேற்படி இளைஞன் மன்னார். மாவட்ட வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.(18)

-நிவாரணப் பணிகள் சீரின்மைகுறித்து குற்றச்சாட்டு-

# ஆலோசகர் ரணவிராஜாவிடம் விளக்கம் கோருகிறார் சனாதிபதி

சுனாமி அனர்த்தம் தொடர்பான நிவாரணப் பணிகளை அரசாங்கம் உரியமுறையில் முன்னெடுக்கத் தவறிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமளிக்குமாறு சனாதிபதி அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

தேசிய நடவடிக்கை செயலணியின் பணிப்பாளரும், சனாதிபதியின்ஆலோசகரமான திலக் ரணவிராஜா இந்தக் குற்றச்சாட்டை வெளிப்படுத்தியிருந்தார். பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வதற்கு முன்பாக இது தொடர்பான கடிதம் திலக் ரணவிராஜாவிற்கு சனாதிபதியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இம்மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பாதிக்கப்பபட்ட மக்களில் 30 சத வீதமானவர்களுக்கு மட்டுமே நிவாரண உதவிகள் கிடைத்திருப்பதாக திலக்ரணவிராஜா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்குள்....

கள் மாற்றப்பட வேண்டும் சுனாமியின் பின் னர் இதற்கான அவசியம் உணரப்பட்டுள்ளது.இலங்கையின் அனைத்து இன மக்களினதும் இறைமையைப் பாதுகாக்கும் விதமான புதிய வெளிநாட்டுக் கொள்கை ஒன்றை விரைவில் அமுற்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.சுனாமியின் பின்னர் வெளிநாட்டவர்கள் அதிகளவில்

இலங்கைக்குள் வருவதற்கு இலங்கையின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கைகளே காரணம் என்றும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார் (32)

## அவசர கூட்டம்

முல்லை வலய அதிபர்களுக்கான அவசர சந்திப்பு இன்று முற்பகல் 11.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் முல்லை வலய அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.

## வடக்கில்....

அழைப்பை விடுத்துள்ளது. இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் எழுச்சி ஊர்வல கண்டனப் பேரணியும்,நினைவஞ்சலி நிகழ்வும் இன்று காலை 8.00 மணிக்கு வவுனியா தமிழ் மகாவித்தியாலயம், இறம்பைக்குளம் புனித அந்தோனியார் தேவாலயம் முன்பாக, பூந்தோட்டச் சந்தி, குருமன்காட்டுச் சந்தி ஆகிய இடங்களில் இருந்து ஆரம்பமாகி வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தைச் சென்றடையும்.

இதேவேளை, மாபெரும் கண்டனக் கூட்டமும், கண்டன அறிக்கை சமர்ப்பித்தல் நிகழ்வும், எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் தேசிய எழுச்சிப் பேர வையினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பொது அமைப்புக்களின் சார்பாக வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், முல்லை மாவட்ட அன்னையர் முன்னணியினரின் கண்டன அறிக்கைகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும், ஏனையோருக்கும் கையளிக்கப்படவுள்ளது. இக் கண்டனக் கூட்டம் மூலம் சமாதானத்திற்கு சாவு மணி அடிக்க முயலும் சிறிலங்கா அரசின் வஞ்சகத்தனத்தினை உலகத்திற்கு அம்பலப்படுத்த அனைவரையும் அணிதிரண்டு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது..

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மாவீரர் மண்டபத்திலும், முள்ளியவளைப் பிரதேசத்தில் வித்தியானந்தாக் கல்லூரியிலும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும், மாங்குளம் பிரதேசத்தில் மாங்குளம் மகாவித்தியாலயத்திலும், பாண்டியன்குளம் பிரதேசத்தில் பாலிநகர் சந்தியிலும், மல்லாவிப் பிரதேசத்தில் மாவீரர் மண்டபத்திலும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

போராளிகள் படுகொலையைக் கண்டித்து மன்னாரில் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மறியல் போராட்டம் நடைபெறவுள்ளது. இதற்கான அழைப்பை மன்னார் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தொழிற்சங்கங்களின் இணையம், மாதர் சங்கங்களின் ஒன்றியம், தமிழ் மாணவர் ஒன்றியம், தேசிய எழுச்சிப் பேரவை, மீனவர் சமாசம் என்பன விடுத்துள்ளன.

யாழ். குடாநாட்டில் இன்று பூரண ஹர்த்தாலுக்கு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் அழைப்பு விடுத்துள்ளது. இதனையொட்டி அனைத்து வியாபார ஸ்தாபனங்களையும் அடைத்து அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்தி கறுப்புக்கொடியைப் பறக்கவிட்டு சோக கீதங்களை இசைக்கச் செய்து அனைத்து மக்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் கேட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டன நிகழ்வு வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது